Registered as a Newspaper
பக்கங்கள் 16+8 விலை ரூ. 60

# உதயன்

சுடர் : 39
கதிர் : 14

ஞாயிற்றுக்கிழமை
10 டிசெம்பர் 2023

கார்த்திகை 24 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2054

**முச்சந்தி முரளி**



"இப்பிடி நான் கணக்கில கரண்டை கட் பண்ணித்தான் உவையள் மின்கட்டணத்தைக் குறைக்கப்போகினம் போல"

# கிளைமோர் தயாரித்ததாக முன்னாள் போராளி கைது

## ரி.ஐ.டி.யினரால் கொழும்புக்கு நேற்றிரவு கொண்டு செல்லப்பட்டார்



**கிளிநொச்சி, டிசெம்பர் 10**

**கிளைமோர் தயாரித்த குற்றச்சாட்டில் முன்னாள் போராளி மற்றும் அதற்கு உதவியதாக ஒருவருமாக இருவர் பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவால் நேற்றுமுன் தினம் கைது செய்யப்பட்டு கொழும்புக்கு நேற்று இரவு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.**

16

## வடக்கில் மழை

யாழ்ப்பாணம், டிசெ. 10

அரபிக்கடலில் புதிய காற்றுச்சுழற்சி உருவாகியுள்ளதால் இலங்கையின் வடக்கு-கிழக்கில் மழைக்கு வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வங்கக்கடலிலிருந்து மழைக் காற்றை வடக்கு மாகாணம் குறிப்பாக யாழ்ப்பாணம் ஈர்ப்பதனால், வடக்கு-கிழக்கில் குறிப்பிடத்தக்க மழைவீழ்ச்சி இன்றும் நாளையும் பதிவாகக் கூடிய சூழல் ஏற்பட்டுள்ளதாக வானிலை எதிர்வு கூறலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ஒ-5)

## மின்கட்டணம் குறையும்

கொழும்பு, டிசெ. 10

நாட்டில் நீர்த்தேக்கங்களில் நீர் நிரம்பியுள்ளது. இதன்மூலம் மின் உற்பத்தியை அதிகரித்து மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பது தொடர்பில் அமைச்சர் காஞ்சன விஜயசேகர பேச்சுகளை ஆரம்பித்துள்ளார் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். (அ-ஒ-இ)

## கிணற்றில் சடலம்

கொடிகாமம், டிசெ. 10

மனநலம் பாதிக்கப்பட்ட குடும்பத்தலைவர் ஒருவர் கிணற்றினுள் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை கைதடி தெற்கில் இடம்பெற்றுள்ளது.

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தின் பணிப்பின் பிரகாரம்

04

## திடீர் மின் தடை; நாடு இருளில்!

கொழும்பு, டிசெ. 10

நாடு முழுவதும் நேற்று மாலை 5.10 மணிக்கு மின்சாரம் தடைப்பட்டது. கொத்மலையில் இருந்து பியகம வரையான மின் விநியோகப் பாதையில் ஏற்பட்ட கோளாறு காரணமாகவே நாடு முழுவதும் மின்விநியோகம் துண்டிக்கப்பட்டதாக

04

## உஷார்!

கொழும்பு, டிசெ. 10

நாடு முழுவதும் நேற்று மாலை மின்தடைப்பட்டது. இதனையடுத்து நாடு முழுவதும் பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் நேற்று முன்னிரவிலிருந்து ஈடுபடுத்தப்பட்டனர். மின்தடை

04

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
அதிகபட்ச முற்பணம்
130,000/=
வட்டிவீதம் மேலும் குறைக்கப்பட்டுள்ளது.
அதிகபட்ச இரகசியத்தன்மை
சிநேகபூர்வமான உடனடி சேவை
சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
011 200 88 88
செலான் வங்கி

## நாடாளுமன்றம் மார்ச்சில் கலைப்பு?

கொழும்பு, டிசெ. 10

2024ஆம் ஆண்டு மார்ச்சில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தலை நடத்துவதற்கு அரசு தயாராகிவருகின்றது என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

2024ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்ட கூட்டத்தொடர் எதிர்வரும் 13ஆம் திகதியுடன் முடிவடைகின்றது. அதன்பின்னர் ஜனவரி 9ஆம் திகதி வரை நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்படவுள்ளது. நாடாளுமன்றம் கூடிய பின்னர் முக்கியமான சில சட்டவரைவுகள் நிறைவேற்றப்பட்ட பின்னர் நாடாளுமன்ற கூட்டத்தொடர் ஜனாதி

04

## இன்றும் கூடும் நாடாளுமன்றம்

கொழும்பு, டிசெ. 10

வற் எனப்படும் பெறுமதி சேர் வரி திருத்தச் சட்டவரைவு மற்றும் நிதிச் சட்டவரைவின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்துக்காக நாடாளுமன்றம் இன்று ஞாயிற்றுக்கிழமை கூடவுள்ளது. (அ-ஒ-இ)

## ஆகாயத் தாமரை ஆபத்து

எச்சரிக்கிறார் ஐங்கரநேசன்

14

சஞ்சீவி



அசோக் TMT
அதிகூடிய பலம் வாய்ந்த கம்பிகள்

யானையின் எடையைப் போல் பன்மடங்கு எடையைத் தாங்கக்கூடிய பலம் கொண்டதோடு, பல நூற்றாண்டுகள் நிலைத்து நிற்கக்கூடிய கட்டிடங்களுக்கும், வீடுகளுக்கும், சந்தையில் உங்களுக்கு மிக அருகாமையில் இலகுவாக கிடைக்கக்கூடிய அதிகூடிய பலம் வாய்ந்த அசோக் TMT கம்பிகளை பயன்படுத்தி முறுக்குக் கம்பி பெறுமதியிலும் பார்க்க 15 சதவீத சேமிப்பை அனுபவித்திடுங்கள்.

பலம் வாய்ந்த கட்டுமானத்திற்கு - அசோக் TMT

ashok STEEL
நீடித்த வலிமை

மத்திய மாகாணம் - 0773825832
வட மேல் மாகாணம் - 0773455128
மேல் / தென் மாகாணம் - 0766773659
கிழக்கு மாகாணம் - 0743712824
வடக்கு மாகாணம் - 0773781397
உடனடி அழைப்புகள் - 011 7388940-3

ஒரு மெட்ரிக் தொன் தலா ரூ. 275,000 + VAT

SLS 375

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுத்தலைமையை உருவாக்குங்கள்!

## தமிழரசுக் கட்சியிடம் சமூக விஞ்ஞான ஆய்வு மையம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், டிசெ. 10

**தமிழரசுக் கட்சி வடக்கு - கிழக்கு முகம் கொண்ட ஒரு கட்சியாகும். கட்சியின் தலைமைத் துவப் போட்டி காரணமாக அந்தக் கட்சி உடையக்கூடிய சந்தர்ப்பம் உள்ள நிலையில் அதனைத் தவிர்ப்பதற்காக ஒரு கூட்டுத்தலைமையை உருவாக்கவேண்டும் என்று சமூக விஞ் ஞான ஆய்வுமையம் கோரிக்கை விடுத்துள்ளது.**

இது தொடர்பில் அந்த அமைப்பு விடுத் துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதா வது:

அரசியல் கட்சிகளுக்குள் முரண்பாடு கள் ஏற்படும்போது அவை மக்களின் அபிலாசைகளையும், வெகுவாகப் பாதிக்கும். தமிழரசுக் கட்சி வடக்கு - கிழக்கில் முகம் கொண்ட கட்சி.

தற்போது தலைமைத்துவப்போட்டி காரணமாக தமிழரசுக்கட்சிக்குள் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. சுமந்திர னுக்கும், சிறீதரனுக்கும் இடையி லேயே அந்த முரண்பாடு ஏற்பட்டுள் ளது. இந்த முரண்பாட்டுக்கு கொள்கை அரசியல், அணுகுமுறை அரசியல் என்பன காரணங்களாக உள்ளன.

சுமந்திரன் அடையாள அரசியலை யும், சிறீதரன் இறைமை அரசியலை யும் நகர்த்தி வருபவர்கள்.

இந்தக் கொள்கை வேறுபாடு காரண மாக சுமந்திரன் இணக்க அரசியல் மீதும் சிறீதரன் எதிர்ப்பு அரசியல் மீதும் அக்கறை கொண்டவர்களாக உள்ள னர்.

இந்த விவகாரங்கள் தொடர்பாகக் கட் சியிடம் திட்டவட்டமான கொள்கை நிலைப்பாடுகள் இல்லாமையும், நிலைமையைச் சிக்கலாக்கியுள் ளது. சுமந்திரனுக்கும், சிறீதரனுக்குமிடை யிலான தலைமைத்துவப் போட்டி கட் சியை உடைவுக்குக்கொண்டு செல்லும் என்ற தோற்றம் தெரியத்தொடங்கி யுள்ளது.

எனவே போட்டிநிலையைத் தவிர்த்து கூட்டுத்தலைமை ஒன்றை உருவாக்கு மாறு கட்சியின் உயர்பீடத்தை சமூக விஞ்ஞான ஆய்வு மையத்தினராகிய நாம் வேண்டிக்கொள்கின்றோம். சுமந் திரன், சிறீதரன், யோகேஸ்வரன் ஆகி யோரை உள்ளடக்கிய முக்கூட்டுத் தலைமையை உருவாக்கலாம் - என் றுள்ளது. (ம)

## சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், டிசெ.10

வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து பெண் ஒருவரிடம் இருந்து வங்கி அட்டையை திருடிச் சென்ற குற்றச்சாட்டில் கொடிகா மத்தைச் சேர்ந்த சந்தேகநபர் ஒருவர் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருடிய வங்கி அட்டையைக் கொண்டு பல்பொருள் அங்காடி ஒன்றில் பொருள் களைக் கொள்வனவு செய்த நிலையில் சந்தேகநபர் நேற்றுச் சனிக்கிழமை நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (எ-100)

## விருந்தகமாக மாறும் போம்பரைச் சிறை

கொழும்பு, டிசெ.10

கண்டி, போகம்பரைச் சிறைச்சாலையை சர்வதேச தரத்திலான ஐந்து நட்சத்திர விருந்தகமாக மாற்றுவதற்குத் திட்டமிடப் பட்டுள்ளது என்று முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனு கம தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்துக்கு உள்ளூர் முதலீட்டா ளர் ஒருவரும் தெரிவு செய்யப்பட்டுள் ளார். சிறைச்சாலையின் வரலாற்றுச் சிறப்பைச் சிதைக்காமல் விடுதி நடத்தப் படும் என்றும் அவர் கூறியுள்ளார். (எ-இ)

## மாற்றுத் திறனாளிகள் நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.10

யாழ். மாவட்டச் செயலகமும், யாழ். மாவட்ட மாற்றுத் திறனாளிகள் அமைப் பும் இணைந்து நடத்திய சர்வதேச மாற் றுத் திறனாளிகள் நிகழ்வு யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் மாற்றுத் திறனாளிகள் அமைப்பின் தலைவர் ஏ. பெலிக்ஸ் ஜோய் தலைமையில் கடந்த புதன்கிழமை மு.ப. 10.30 மணிக்கு நடைபெற்றது. (ரி-66)



## வரியற்ற வாகனங்கள் கோரும் நாடாளுமன்ற உறுப்பினர்கள்!


கொழும்பு, டிசெ.10

சுங்க வரி இன்றி வாகனங்களை இறக்குமதி செய் வதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்கக் கோரி சுமார் 50 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகர் மற்றும் அரசாங்கத்திடம் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளனர் என்று தெரியவருகி றது.

நாட்டின் பொருளாதார நிலைமையானது தற் போது ஓரளவுக்குச் சீராகி இருப்பதால், தமது கோரிக்கையை நிறைவேற்றவேண்டும் என்று அவர்கள் கேட்டுள்ளனர்.

வாகன இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரங்களை கோரியுள்ள இந்த நாடாளுமன்ற உறுப்பினர்க ளில் பெரும்பாலானவர்கள் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்பதுடன் தமக்குச் சொந்தமான வாகனங்கள் எதுவுமில்லை என அவர்கள் கூறி யுள்ளனர். (எ-இ)

## கசூரினா கடற்கரையில் உயிர்காப்புக் கண்காணிப்பகம்



யாழ்ப்பாணம், டிசெ. 10

காரைநகர் கசூரினாக் கடற்க ரையில் உயிர்காப்புக் கண்கா ணிப்பு மையம் அமைப்பது தொடர்பில் கடற்படை அதிகாரி களுக்கும், காரைநகர் பிர தேசசபையின் செயலாளர் உள்ளிட்ட திட்ட அமுலாக்கப் பிரதிநிதிகளுக்கும் இடையே யான கலந்துரையாடல் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

குறித்த மையம் சுற்றுலாவி களின் பாதுகாப்பான கடற்குளி யல் செயற்பாட்டுக்கு மிகவும் அவசியமாகவிருப்பதால் காரைநகர் பிரதேச சபை இதற் கான நடவடிக்கைகளை எடுத் துள்ளது.

இந்நிலையில் உயிர்காப்பு கண்காணிப்பு மையத்தை விரைவாக அமைப்பது மற்றும் சாத்திய வளப் பொறிமுறை தொடர்பாக மேற்படி கலந்துரை யாடலில் ஆராயப்பட்டது. (ம-66)

## காணாமல் ஆக்கப்பட்டோருக்காக கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.10

சர்வதேச மனித உரிமைகள் தினமான இன்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன் னெடுக்கப்படவுள்ளது.

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட் டோரின் உறவினர்களின் சங்கத்தால் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்று காலை 9.30 மணிக்கு ஏ-9 வீதி, கிளி நொச்சியில் உள்ள சங்கத்தின் பணிமனை முன் பாக ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன், இந்தப் போராட்டத்தில் அனைவரும் கலந்துகொள்ளவேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார். (எ-100)

## தோட்டத்தொழிலாளர்களுக்கு தினச்சம்பளமாக ரூபா 1,700!

கொழும்பு, டிசெ. 10

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பான கூட்டு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ளு மாறும், தோட்டத் தொழிலாளர்கள் கோரும் குறைந் தபட்ச நாளாந்த சம்பளமாக ஆயிரத்து 700 ரூபாவை வழங்குதல் அல்லது அதிகரிக்கப்படும் சம்பளம் குறித்து டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன் அறியத்தரு மாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தோட்டக் கம்பனிகளின் பிரதானிகளுக்குப் பணிப்புரை விடுத் துள்ளார். பெருந்தோட்ட நிறுவனங்களின் பிரதானி களுடன் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஜனாதி பதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாட லின்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ் வாறு தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## சந்நிதியான் ஆச்சிரமத்தால் மலையக மக்களுக்கு உதவி



யாழ்ப்பாணம், டிசெ. 10

மலையகம், பதுளை மாவட்டத்தின் பல பகுதிகளில் ஏற்பட்ட மண் சரிவால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாமில் வசிக்கின்ற 83 குடும்பங்களுக்கு கடந்த புதன்கிழமை சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் 4 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ரி-66)



## ஒளிவிழா

சாவகச்சேரி, டிசெ.10

சாவகச்சேரி சக்தி அம்மன் த.க.பாடசாலையில் கடந்த வெள்ளிக்கிழமை பாலன் பிறப்பை முன்னிட்டு ஒளி விழா நடைபெற்றது. பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சாவகச்சேரி கத்தோலிக்க பங்குத்தந்தை கலந்துகொண்டார். (ரி-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த வருடமே மின்சாரச் சட்ட வரைவு



கொழும்பு, டிசெ.10

உத்தேச மின்சார சட்ட வரைவு எதிர்வரும் 13 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படமாட்டாது என மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

மின்சார சட்டவரைவு தொடர்பில் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மின்சார சட்டவரைவு திடீரென சமர்ப்பிக்கப்படுவதற்கான சதித்திட்டம் எதுவும் இல்லை என்பதை முதலில் புரிந்துகொள்ளவேண்டும். 20 வருடங்களாகப் பேசப்பட்டு வரும் இந்த சட்டவரைவை மேலும் ஒரு மாதம் பிற்போடுவதில் பிரச்சினை இல்லை என்றும் அவர் தெரிவித்தார். (எ-இ)

# அரச நிறுவனங்களுக்கு நன்னடத்தை வழிகாட்டல்

கொழும்பு, டிசெ. 10

அரச நிறுவனங்கள் செயற்படும் நடைமுறை தொடர்பான வழிகாட்டல்களைக் கொண்ட கையேடொன்றை விரைவில் வெளியிடவுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அதன் ஆணையாளர் நிமால் புஞ்சிஹேவா தெரிவிக்கையில்,

இன்று 10ஆம் திகதி கடைப்பிடிக்கப் படும் சர்வதேச மனித உரிமைகள் தினத்தையிட்டு நாளை 11ஆம் திகதி நடைபெறவுள்ள நிகழ்வில் இந்தக் கையேட்டை வெளியிட எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இதில் பொலிஸ், சிறைச்சாலை, நன்னடத்தை நிலையம் ஆகியன தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள் ளது. நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்ட பின்னர் செயற்பட வேண்டிய நடைமுறை, உளநலம் பாதிக்கப்பட்ட நபரை வழிநடத்தும் நடைமுறை மற்றும் சிகிச்சை அளித்தல் ஆகிய வழிகாட்டல்கள் இந்தக் கையேட்டில் அடங்குமென அவர் தெரிவித்தார். (ச-இ)

# ஷானி அபேசேகரவுடைய பாதுகாப்பைப் பலப்படுத்துக

*சஜித் இவ்வாறு வலியுறுத்து*

கொழும்பு, டிசெ. 10

சி.ஐ.டி.யின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவைக் கொலை செய்வதற்குச் சதித்திட்டம் இடம்பெறுவதாக தகவல் வெளியாகியுள்ளது. எனவே, அவரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.



நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஷானி அபேசேகரவை வாகனம்ஏற்றி கொலைசெய்ய சதித் திட்டம் தீட்டியது தொடர்பான தகவல்கள் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளால் சமீபத்தில் நீதிமன்றில் வழக்கு நடவடிக்கையொன்றில் வெளியிடப்பட்டுள்ளன.

இது பாரதூரமான விடயம். அவரது உயிரைப் பாதுகாப்பதற்காக முறையான பாதுகாப்பை வழங்குவது அரசின் பொறுப்பாகும். அவருக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரிக்கை விடுக்கின்றேன் - என்றார். (ம-44)

# இரகசிய நகர்வுகளில் சந்திரிகா குமாரதுங்க



**கொழும்பு, டிசெ.10**

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிரணிகள் சார்பில் கூட்டணி ஒன்றைக் களமிறக்க முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் இரகசியமான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார் என்று பேசப்படுகிறது.**

எனினும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க வேட்பாளராகப் போட்டியிட்டால், சந்திரிகா தனது இந்த நடவடிக்கையை நிறுத்தி விட்டு, ரணிலுக்கு ஆதரவளிக்கத் தீர்மானித் துள்ளார் என்றும் கூறப்படுகின்றது. (எ-இ)

# சேறுபூசும் நோக்கத்திலேயே உருவாக்கப்பட்டது அறிக்கை

*சஜித் குற்றச்சாட்டு*

கொழும்பு, டிசெ.10

எனக்கும் எனது மனைவிக்கும் சேறுபூசும்நோக்கில் மொட்டுக் கட்சி ஆதரவாளர் ஒருவரால் தயாரிக்கப்பட்டுள்ள உள்ளகக் கணக்காய்வு அறிக்கையே சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இந்தச் சபையில் அரச பொறியியல் கூட்டுத்தாபன உள்ளகக் கணக்காய்வு அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது. அதுதொடர்பில் ஆராய்ந்து பார்த்த போது அது அரச பொறியியல் கூட்டுத்தாபன உள்ளகக் கணக்காய்வு அதிகாரி என்.வி.டி.தம்மிக என்ற நபரால் தயாரிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையாகும். மொட்டுக்கட்சியிலுள்ள தொழிற்சங்க உறுப்பினர்களைப் பயன்படுத்தி தவறான அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

# உணவு ஒவ்வாமை மாணவர் பாதிப்பு

கொழும்பு, டிசெ. 10

உணவு ஒவ்வாமையால் தரம்- 6 இல் கல்வி பயிலும் 12 மாணவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் வெவெல்தெனியப் பகுதியிலுள்ள பாடசாலையொன்றில் நடந்துள்ளது.

மனையியல் பாடத்திட்டத்தின் போது, தயாரிக்கப்பட்ட உணவை உட்கொண்டமையால் இந்த விபரீதம் நிகழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் தங்கொவிட்ட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

### உஷார்!...

யைப் பயன்படுத்தி அசம்பாவிதங்கள் இடம்பெறக்கூடும் என்ற எச்சரிக்கை காரணமாக பொலிஸார் பாதுகாப்பு கடமையில் களமிறக்கப்பட்டனர். (அ-ஒ-இ)

### கிணற்றில்...

தென்மராட்சிப் பிரிவு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி திருமதி சி.தவமலர் விசாரணையை மேற்கொண்டார். சட்ட மருத்துவ அதிகாரியின் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ-ஒ-159)

### நாடாளுமன்றம்...

புதியால் இடைநிறுத்தப்படவுள்ளது.

அவ்வாறு நாடாளுமன்றம் இடைநிறுத்தப்படும்நாளில் இருந்து இரண்டு மாதங்களுக்கு மேற்படாத வகையில் புதிய நாடாளுமன்ற கூட்டத்தொடர் ஆரம்பமாகவேண்டும். எனவே, மார்ச்சில் நாடாளுமன்றம் கலைக்கப்படவுள்ளது என சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (அ-ஒ-44)

### திடீர்...

அறிவிக்கப்பட்டது.

இதனால் நாடு முழுவதும் பெரும் நெருக்கடி ஏற்பட்டது. பிரதான வீதிகளின் வீதி சமிக்ஞைகள் இயங்காமையால் நெரிசல் ஏற்பட்டது. இரவு வேளையில் திடீரென மின்சாரம் தடைப்பட்டமையால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

நேற்று இரவு 7.30 மணி தொடக்கம் படிப்படியாக மின் விநியோகம் வழமைக்கு திரும்பத் தொடங்கியது. கொழும்பு உட்பட மேல் மாகாணத்துக்கு முதலில் மின்சாரம் வழமைக்குத் திரும்பியது. இரவு 10.20 மணியளவில் வடக்கு மாகாணம் உட்பட பெரும்பான்மையான பகுதிகளுக்கு மின்சாரம் கிடைக்கப்பெற்றது. ஆனாலும் இன்னும் சில பகுதிகளுக்கு நள்ளிரவு தாண்டியும், இந்தச் செய்தி எழுதப்படும் வரை மின்சாரம் மீள வழங்கப்படவில்லை. (அ-ஒ-113)

### நாடாளுமன்றத்தை கலைத்தால் சிறப்பு

வரவு - செலவுத் திட்ட கூட்டத்தொடர் முடிவடைந்த பின்னர் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் அது சிறப்பான முடிவாக அமையும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். பாதீட்டு கூட்டத்தொடர் எதிர்வரும் 13 ஆம் திகதி முடிவடைகின்றது. அதன்பின்னர் ஜனவரி மாதம் வரை நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்படும். அவ்வாறு ஒத்திவைக்கப்படும் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, தேர்தல் நடத்தப்பட்டால் அது சிறந்த முடிவாக அமையும் என்று அவர் கூறியுள்ளார். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பில் 1,664 பேருக்கு வீடுகள்

முல்லைத்தீவு, டிசெ. 10

**ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய, வடக்கு மாகாணத்தில் ஆளுநரின் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ள 25 ஆயிரம் வீட்டுத் திட்டத்துக்கான விண்ணப்பங்கள் மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஊடாக ஏற்கப்பட்டு வருகின்றன.**

வட மாகாணத்துக்கான தலா 50 இலட்சம் ரூபா பெறுமதியான 25 ஆயிரம் சூரிய மின்னுற்பத்தி இலவச வீட்டுத் திட்டத்துக்குரிய விண்ணப்பங்கள் ஏற்கும் நடவடிக்கை இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. இதற்கான நடவடிக்கைகள் முல்லைத்தீவு மாவட்டத்திலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் வீட்டுத்திட்டப் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் சி.ஜெயகாந்தன் தெரிவித்தார். வீடு கட்டுவதற்குக் காணி இல்லாத நிலையில் 305 குடும்பங்களும் காணியுள்ள ஆயிரத்து 359 குடும்பங்களுமாக புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் ஆயிரத்து 664 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-19)



## ஊரெழு கணேசாவில் போஷாக்குணவுத் திட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 10

ஊரெழு கணேச வித்தியாசாலையில் தரம் - 6 முதல் தரம் - 11 வரையிலான மாணவர்களுக்குப் போஷாக்கு உணவு வழங்கும் திட்டம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கான நிதியனுசரணையை பாடசாலையின் முன்னாள் அதிபர் அமரர் நரசிம்மன் கந்தையாவின் உறவினர்கள் வழங்கியுள்ளனர்.

பரீட்சார்த்தமாக ஆறு மாதங்களுக்கு இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)

## முறைப்பாடுகளுக்கு விரைவான தீர்வுகள்

யாழ்ப்பாணம், டிசெ. 10

வடக்கு மாகாண ஆளுநரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் செயற்படும் 'அபயம்' குறைகேள் வலையமைப்பால் குறுகிய காலத்துக்குள் 250 க்கும் மேற்பட்ட முறைப்பாடுகளுக்கான தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் எதிர்நோக்கும் சிக்கல்களைஅறிவிப்பதன் ஊடாக ஒரு வாரத்துக்குள் அவற்றுக்குத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

உணவு மற்றும் ஊட்டச்சத்து, கல்வி மற்றும் சுகாதாரம், பாதுகாப்பு, உளவளம், சிறுவர், இளையோர் மற்றும் மகளிர் விவகாரம் உள்ளிட்ட பிரிவுகளில் மாணவர்கள், சிறார்கள் மற்றும் பொதுமக்கள் எதிர்நோக்கும் சிக்கல்களுக்கான தீர்வுகளை அரச பொறிமுறையின் ஊடாக 'அபயம்' குறைகேள் வலையமைப்பால் பெற்றுக்கொடுக்கப்படுகிறது.

070 666 66 77 என்ற இலக்கத்துக்கு அழைப்பை மேற்கொள்வதன் மூலமும், வட்ஸ்அப், வைபர் ஊடாகவும் முறைப்பாடுகளைப் பதிவு செய்ய முடியும். childhelpnp@gmail.com என்ற மின்னஞ்சலுக்கும், " அபயம் ஆளுநர் செயலகம், வடக்கு மாகாணம், பழைய பூங்கா, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கும் முறைப்பாடுகளை அனுப்பி வைக்க முடியும். ஆளுநர் செயலகத்துக்கு நேரடியாக வந்து எழுத்து மூலமும் மனுக்களைச் சமர்ப்பிக்கமுடியும். 'அபயம்'குறைகேள் வலையமைப்பானது 24 மணித்தியால சேவையை வழங்குகின்றது. (ரி-27)

## மனிதஉரிமை தின நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.10

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய காரியாலயத்தால் சர்வதேச மனித உரிமைகள்தின நிகழ்வு யாழ்ப்பாணத்திலுள்ள கலைத்தூது அழகியல் கல்லூரி (கலைக்கோட்டம்) மண்டபத்தில் எதிர்வரும் புதன்கிழமை காலை 9.45 மணி தொடக்கம் 12 மணி வரை நடைபெறவுள்ளது.

நிகழ்வில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட மனித உரிமை பாதுகாவலர்களுக்கான வழிகாட்டல்கள் தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. (ரி-100)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிசெ.10

யாழ். பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறையால் வருடாந்தம் கல்விப் பொதுத் தராதர உயர்தரத்தில் வரலாற்றை ஒரு பாடமாகக் கற்கும், 2023ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.உரும்பிராய் இந்துக் கல்லூரியில் நேற்றும், இன்றும் காலை 8:30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை இந்தக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

கருத்தரங்கில் இம்முறை க.பொ.த. உயர்தரத்தில் தோற்றவுள்ள மாணவர்கள் கலந்து கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி-125)

## வலி.கிழக்கில் கழிவுப்பொருள் அகற்றல்

யாழ்., டிசெ. 10

வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தில் கழிவுப் பொருள்களை அகற்றும் பணிகள் கழிவகற்றும் பிரிவினரால் தினமும் சுழற்சி முறையில் மேற்கொள்ளப்படுகிறது.

கழிவகற்றும் வாகனங்களில் ஒலிபெருக்கி பொருத்தப்பட்டு மக்களுக்கு அறிவித்தல் வழங்கி இந்தச் செயற்பாடு இடம்பெறுகிறது.

அதேவேளை வலி.கிழக்குப்பிரதேசசபையினரால் 'பிளாஸ்ரிக் கழிவுகள் அற்ற பசுமையான பிரதேசத்தைக் கட்டியெழுப்புவோம்' என்ற தொனிப்பொருளில் விழிப்புணர்வுப் பேரணியும் கடந்த செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டது. (ச-17)



## கபிலத் தத்தி பெருக்கத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை!

கிளிநொச்சி, டிசெ.10

கிளிநொச்சி மாவட்டத்தில் நெற்செய்கையில் கபிலத் தத்திகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக விவசாயிகளுக்கு ஒலிபெருக்கி ஊடாக பொது அறிவிப்பு விடுக்கப்படவுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் கபிலத் தத்திகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக கிளிநொச்சி பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

கபிலத் தத்திகளின் பரவலுக்கு கால நிலை, தன்னிச்சையான கிருமி நாசினி கையாளுகை, காலாவதித் திகதி முடிவடைந்த கிருமி நாசினிகளைப் பயன்படுத்தியமை, வயலில் நீர் உள்ளபோது கிருமிநாசினி தெளித்தமை, வெவ்வேறான காலகட்டங்களில் பயிர்ச்செய்கை முதலானவை சுட்டிக்காட்டப்பட்டன.

இந்த நடவடிக்கைகள் தொடர்பாக விவசாயிகளுக்கு ஒலிபெருக்கி ஊடாக பொது அறிவிப்பு விடுக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ரி-113)

## குருதிக்கொடை

யாழ்ப்பாணம், டிசெ.10

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும், குமரன் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் மாபெரும் குருதிக் கொடை முகாம் கோண்டாவில் சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள குட்டிச் சுட்டி முன்பள்ளியில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் குருதிக்கொடை வழங்கும் அனைவருக்கும் பெறுமதியான ஊக்குவிப்புப் பரிசில் வழங்கப்படும் எனவும், அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ரி-66)

## இசையரங்கு

யாழ்ப்பாணம், டிசெ.10

சங்கீத வித்துவான் ஏ.கே.கருணாகரனின் முதலாவது ஆண்டு நினைவுதினத்தை முன்னிட்டு இணுவையூர் ரசிகப்பிரியா சபா கலைவளர்ச்சி மையம் நடத்தும் இசையரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இணுவில் மஞ்சத்தடி அருணகிரிநாதர் கலையரங்கத்தின் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தன் பேராசிரியர் கலாநிதி என். சண்முகலிங்கன் பங்கேற்கவுள்ளார். (ச)

## விவசாயக் குழுக் கூட்டம்!

கிளிநொச்சி, டிசெ. 10

கிளிநொச்சி மாவட்டத்தில் நடப்பாண்டுக்கான இறுதி மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மு.ப 10மணிக்கு நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாயத்துறை சார்ந்த பல்வேறு விடயங்கள் கூட்டத்தில் முன்கொண்டு வரப்பட்டு விரிவாக ஆராயப்பட்டன.

கடந்த காலக் கூட்ட அறிக்கை, நீர்ப்பாசன குளங்களின் தற்போதைய நிலைமைகள், காலபோக பயிர்ச்செய்கை, துறைசார்ந்து தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற திட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது, கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பிரிவு, நீர்ப்பாசனத் திணைக்களம், விவசாயம் காப்புறுதி, மாகாண விவசாய திணைக்களம், கமநல அபிவிருத்தித்திணைக்களம், விதை ஆராய்ச்சி நிலையம் உள்ளிட்ட பல்வேறு திணைக்களங்களின் செயற்பாடுகள் தொடர்பில் திணைக்களத் தலைவர்களுடன் கலந்துரையாடி முடிவுகள் எட்டப்பட்டன. (ரி-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரனைச் சந்திக்க மகாநாயக்கர் முயன்றாராம்

கொழும்பு, டிசெ. 10

**நாட்டில் இனப்பிரச்சினை உட்பட அனைத்துவிதமான பிரச்சினைகளுக்கும் நிரந்தரமான சமாதானம் ஏற்படுவதற்கு நாம் எப்போதும் தடைகளை ஏற்படுத்தவில்லை என்று அஸ்கிரிய, மல்வத்து பீடங்களின் தேரர்கள் உலகத் தமிழர் பேரவையிடத்தில் தெரிவித்துள்ளனர்.**

உலகத் தமிழர் பேரவை உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் கண்டிக்கு விஜயம் மேற்கொண்டதோடு. அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடாதிபதிகளை நேரில் சந்தித்துக் கலந்துரையாடல்களில் ஈடுபட்டனர். இதன்போதே தேரர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர். சந்திப்பின்போது மல்வத்துபீட மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீசுமங்கலதேரர் தெரிவித்ததாவது: நாட்டில் காணப்படுகின்ற பல பிரச்சினைகளை கலந்துரையாடல் மூலமாகத் தீர்க்க முடியும் என்பதே எனது நிலைப்பாடாகும். போர்க் காலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை சந்திப்பதற்கு அரசாங்கத்திடம் பல தடவைகள் கேட்டிருந்தேன். சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு பல முயற்சிகளை எடுத்திருந்தேன். எனினும் அவை கைகூடியிருக்கவில்லை. பின்னர் போர் முடிவுக்கு வந்ததையடுத்து வடக்கு, கிழக்கின் பிரதான பகுதிகளுக்கு நேரடியாகவே விஜயங்களைமேற்கொண்டு நிலைமைகளைபார்வையிட்டேன். அவர்களின் வாழ்வியல் மேம்பாட்டுக்காக பிரார்த்தனைகளை மேற்கொள்கின்றோம் - என்றார். (ம)

## இஸ்ரேலுடன் உறவைத் துண்டிக்குக

### டிலான் பெரேரா வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 10

ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்துக் கோரிக்கைகளையும் இஸ்ரேல் நிறைவேற்றும் வரை, தற்காலிகமாக இஸ்ரேலுடன் இருக்கும் தூதரகத் தொடர்புகளை இலங்கை அரசாங்கம் நிறுத்தவேண்டும் என்று இலங்கை பலஸ்தீன நட்புறவுச் சங்கத்தின் செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

இலங்கை பலஸ்தீன நட்புறவு சங்கம் கொழும்பில் நேற்று (கடந்த வியாழக்கிழமை) கூடியது. கட்சி பேதமின்றி அனைத்துத் தரப்பினரும் இதில் கலந்துகொண்டிருந்தனர். இதன்போது ஐக்கிய நாடுகள் சபை யின் அனைத்துக் கோரிக்கைகளையும் இஸ்ரேல் நிறைவேற்றும்வரை தற்காலிகமாகவேனும் இஸ்ரேலுடனான தூதரகத் தொடர்புகளை நிறுத்த வேண்டும் என நாங்கள் தீர்மானம் மேற்கொண்டோம் - என்றார். (ம)

## மரவள்ளிக் கிழங்கு விலையில் வீழ்ச்சி

யாழ்ப்பாணம், டிசெ. 10

யாழ். குடாநாட்டில் மரவள்ளிக் கிழங்கின் விலை திடீரென வீழ்ச்சியடைந்துள்ளதால் மரவள்ளிச் செய்கையாளர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

மரவள்ளிச் செய்கையில் அதிகமான விவசாயிகள் ஈடுபட்டதாலும் கூடுதலாக மரவள்ளிக்கிழங்கு சந்தைக்கு வந்து சேர்வதாலும் அவற்றின் விலை சரிந்துள்ளது. திருநெல்வேலிச் சந்தையில் நேற்று ஒரு கிலோ மரவள்ளி 70 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது. (ச-17)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** திடீர் செலவுகள் ஏற்பட்டாலும், தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளது. பொறுமை அவசியம்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. காரியங்கள் சாதகமாக முடியும். உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும்.

**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சிலருக்கு உறவினர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புள்ளது. பேசும் வார்த்தைகளில் நிதானம் தேவை.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாகும். புதிய முயற்சிகளுக்கு சாதகமான நாள். செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. எதிர்பார்த்த தகவல் கிடைக்கும். மகிழ்ச்சி உண்டாகும்.

**சிம்மம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். கையிருப்பு கரைவதுடன் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். பிணக்குகள் நீங்கும். குடும்பித்தில் சில பிரச்சினைகள் ஏற்படலாம்.

**கன்னி:** பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். முக்கியமான முடிவுகள் சாதகமாக முடியும். தொலைதூரத்திலிருந்து எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும்.

**துலாம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உங்கள் முயற்சிகளுக்கு உறவினர்கள் ஒத்துழைப்புத் தருவார்கள். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். எதிரிகள் வகையில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது கவனமாக இருக்கவும். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்படலாம். பாதிப்பு எதுவும் இருக்காது.

**தனுசு:** புதிய முயற்சி எதுவும் வேண்டாம். அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். செலவுகளைச் சமாளிக்க வேண்டிய சூழ்நிலையும் சிலருக்கு ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும்.

**மகரம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கி, அந்நியோன்னியம் அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**கும்பம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த பணஉதவி கிடைக்கும். செலவு செய்யவேண்டி வரும். பணவரவு கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்தவும். சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். மனவருத்தங்கள் நீங்கும்.

## குற்றங்கள்

### கடத்தப்பட்டு துப்பாக்கிச்சூடு

கொழும்பு, டிசெ. 10

பொலிஸார் எனக் கூறி காரில் வந்த சிலரால் இளைஞர் ஒருவர் கடத்தப்பட்டு அவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

ஹபராதுவ தல்பே வடக்குப் பகுதியில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்தவர் கராப்பிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ச-இ)

### கட்டுநாயக்காவில் 'குஷ்' போதை மீட்பு

கொழும்பு, டிசெ. 10

100 மில்லியன் ரூபா பெறுமதியான 'குஷ்'ரக போதைப்பொருள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து மீட்கப்பட்டுள்ளது.

விமான நிலையத்திலிருந்த சந்தேகத்துக்கிடமான பொதி ஒன்றில் இருந்து குறித்த போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது. சுமார் 20 கிலோ கிராம் நிறையுடைய 'குஷ்' ரக போதைப்பொருள் இதன்போது மீட்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

### துப்பாக்கிச்சூடு; ஒருவர் காயம்!

கொழும்பு, டிசெ. 10

கால்நடைப் பண்ணையொன்றில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் அம்பாறை மஹாஓயா பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது.

மஹாஓயாப் பகுதியைச் சேர்ந்த ஒருவரே துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்துள்ளார். (ச-இ)

### பணமோசடி; பெண் கைது

கொழும்பு, டிசெ. 10

வெளிநாடொன்றில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பெண்ணொருவர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். கந்தானை - நாகொட பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டார்.

இவர் தென்கொரியாவில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி பணமோசடியில் ஈடுபட்டாரெனவும் அவருக்கெதிரான 15 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்றும் விசாரணையில் தெரியவந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

### திருட்டுச் சந்தேகநபர் ஹெரோய்னுடன் கைது

பொருட்களும் மீட்பு!

கிளிநொச்சி, டிசெ. 10

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றில் கடந்த 29ஆம் திகதி இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த பிரதான சந்தேகநபர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

47 பவுண் நகைகளும், பெரும்தொகைப் பணமும் திருடப்பட்டதாக வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், நேற்று சந்தேகநபர்களைக் கைது செய்தனர். சந்தேகநபர்களிடமிருந்து ஒரு தொகுதி நகைகளும், ஹெரோய்னும், ஒரு இலட்சத்து 98 ஆயிரம் ரூபா பணமும் மீட்கப்பட்டுள்ளன. பிரதான சந்தேகநபர் நீதிமன்றின் உத்தரவுக்கு அமைய எதிர்வரும் 15ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். ஏனைய இருவரும் ஆட்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (ம-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வதைக் கலாசாரத்துக்கு எப்போது முற்றுப்புள்ளி?

இலங்கை நாடாளுமன்றத்தில் நீண்ட நாள்களின் பின்னர், ஆக்கபூர்வமான ஒரு கருத்து முன்வைக்கப்பட்டிக்கின்றது. தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை, மாணவச் சிறார்களுக்கு அதீத சுமைகளையும் - வதைகளையும் வழங்குகின்றது. ஆதலால், அந்தப் பரீட்சை இல்லாமற் செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கின்றார் முன்னாள் ஜனாதிபதியும் சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன. வளர்ச்சியடைந்த நாடுகளில் தரம் எட்டுக்குப் பின்னரே தவணைப் பரீட்சைகள் (எழுத்து) நடைமுறையில் இருக்கும் நிலையில், இலங்கை முற்றிலும் முரணான பிறழ்வான கல்விக் கலாசாரத்தைக் கொண்டிருக்கின்றது என்றும் அவர் காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கைச் சிறார்கள் - பத்தே வயதான பாலகர்களாக - ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையால் அடையும் துன்பங்கள் சொல்லிமாளாதவை. தமது பிள்ளை புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்த வேண்டும் என்று கருதும் பெற்றோரால் ஒரு புறமும், தமது பாடசாலையின் சித்தி வீதம் சராசரி மேம்பட வேண்டும் என்றெண்ணும் ஆசிரியர் மற்றும் அதிபர்களால் மறுபுறமுமாக ஒரு 'மத்தளம் போன்று' பிள்ளைகள் படும் பாடு பெரும்பாடு. பரீட்சை என்றால் என்னவென்று அறியாத பிள்ளைகளுக்கு, வைக்கப்படும் விஷப் பரீட்சைதான் இந்தப் புலமைப்பரிசில் பரீட்சை. இது பிள்ளையின் உடல், உள ஆரோக்கியத்திலும் நேரடியாகச் செல்வாக்கைச் செலுத்துகின்றது. அவர்களின் உள அமைதியைச் சீர்குலைக்கின்றது என்று துறைசார் நிபுணர்கள் முதல் ஆர்வலர்கள் வரையில் பெரும் புள்ளிகள் பலரும் எச்சரித்த பின்னரும்கூட இந்த விஷப்பரீட்சையை வேரறுக்க முடியவில்லை. மாறாக அதன் வேர்கள் இன்னுமின்னும் ஆழமாகத்தான் சென்று கொண்டிருக்கின்றன.

இன்று உலகில் மிகச்சிறந்த கல்விக்கொள்கையைக் கொண்டிருக்கும் நாடுகளாகக் கருதப்படும் எந்தவொரு நாட்டிலும் இதுபோன்ற பரீட்சைகள் இல்லவேயில்லை. ஆனால், முரணானதும் - கடைநிலைக் கல்விக்கொள்கையைக் கொண்டுள்ளவையுமான ஆசிய நாடுகளில்தான் இப்படிப்பட்ட பரீட்சை வதைகள் நிறைந்திருக்கின்றன. இலங்கையும் அதன் ஓர் அம்சமே. கற்றலுக்குள் கால் பதித்த குறுங்காலத்துக்குள் எந்தத் தடைதாண்டல் பரீட்சைகளும் இல்லாதமையால்தான் ஸ்கன்டிநேவிய நாடுகளின் கல்விக் கட்டமைப்பு இன்று நிகர் இல்லாமல் ஓங்கி உயர்ந்து நிற்கின்றது. மட்டுமல்லாமல், குழந்தைகளின் மன அமைதியைப் பேணுகின்ற நாடுகளின் பட்டியலிலும், குழந்தைகள் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கு ஏதுவான நாடுகளின் பட்டியலிலும் முதலிடங்கள் ஸ்கன்டிநேவிய தேசங்களுக்குத்தான். மறுமுனையில், அதீதமான தடைதாண்டல்பரீட்சைகளைக் கொண்டிருக்கும் ஜப்பான், குழந்தைகள் தற்கொலை செய்துகொள்ளும்நாடுகளின்பட்டியலில் முன்னிலையில் இருக்கின்றது. இதிலிருந்து பச்சிளம் வயதில் நடத்தப்படும் இந்தப் பரீட்சைகள் எவ்வளவுதூரம் குழந்தைகளில் எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்று வெளிப்படுகின்றதல்லவா?

இந்தப்பரீட்சையில் வெற்றிபெறும் (?) பொருளாதாரம் நலிந்த மாணவர்களுக்கு வழங்கப்படும் சிறுதொகை, அவர்களின் அடுத்தகட்ட கற்றலுக்கு உதவுகின்றதல்லவா? என்ற விவாதப்புள்ளியை வைத்து சமரசம் செய்வதற்குப் பலர் முனையலாம். அந்தச் சிறுதொகையால் பொருளாதாரத்தில் குன்றிய சில மாணவர்கள் பயன்பெறுகின்றார்கள் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், பரீட்சை வைத்துத்தான் பொருண்மியம் நலிந்த மாணவர்களுக்கு உதவவேண்டுமென்று எந்தக் கட்டாயமும் இல்லை. பரீட்சைக்குச் செலவிடப்படும் தொகையையும் சேர்த்து ஏதேனும் பொதுப்பொறிமுறைகள் ஊடாக பொருண்மியம் நலிந்த மாணவர்களை மேலும் பலப்படுத்தலாம். ஆக, புலமைப்பரிசில் பரீட்சைக்கு சமரசமின்றிய தடைதான் இலங்கைக் குழந்தைகளின் எதிர்காலம்.




## கட்டாருக்கு அலி சப்ரி

கொழும்பு, டிசெ. 10

கட்டாருக்கு உத்தியோகபூர்வ பயணமொன்றை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி நேற்றுச் சனிக்கிழமை மேற்கொண்டுள்ளார்.

டோஹா மன்ற மாநாட்டில் பங்கேற்பதற்காக அவர் அங்கு சென்றுள்ளார். இந்தப் பயணத்தின் போது வெளிவிவகார அமைச்சர் கட்டார் பிரதமருடன் பேச்சு நடத்த உள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## பதவி உயர்வு

கொழும்பு, டிசெ. 10

ஆயிரத்து 877 கடற்படை அதிகாரிகளுக்குப் பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது என்று கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கைக் கடற்படையின் 73 ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்றுக் கொண்டாடப்பட்டது. அதனை முன்னிட்டு இந்தப் பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## ஆசிய வங்கியால் 200 மில். டொலர்!

கொழும்பு, டிசெ. 10

இலங்கைக்கு 200 மில்லியன் அமெரிக்க டொலரை சலுகைக் கடனாக வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி அனுமதி வழங்கியுள்ளது. (ச-இ)

## 2024இல் தனிநபர் வரிச்சுமை 30,000

**கொழும்பு, டிசெ. 10**

**அரசாங்கம் உத்தேசித்துள்ள வரிகள் காரணமாக 2024ஆம் ஆண்டில் தனியொருவர் மேலும் 30 ஆயிரம் ரூபாவை அரசாங்கத்துக்கு வரியாகச் செலுத்த வேண்டியிருக்கும் என்று வழிகள் மற்றும் வழிமுறைகள் குழு வெளிப்படுத்தியுள்ளது.**

2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் ஒரு இலட்சம் ரூபா வரி செலுத்தியுள்ளமை தெரியவந்துள்ளது. எனினும் 179 பில்லியன் வசூலிக்கப்படாத வரிகள் உள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

## நாட்டைக் கட்டியெழுப்ப இமயமலைப் பிரகடனம்

### உலகத் தமிழர் பேரவை ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்பு

கொழும்பு, டிசெ. 10

இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம், மறுசீரமைப்பு, சமூக நலன் மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றை மையமாகக் கொண்டு 6 முக்கியமான விடயங்களை உள்ளடக்கிய இமயமலைப் பிரகடனத்தை உலக தமிழர் பேரவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்துள்ளது.

நாட்டைக் கட்டியெழுப்பும் ஜனாதிபதியின் செயற்றிட்டத்தைப் பாராட்டிய உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதிகள், அதற்குத் தமது முழுப் பங்களிப்பை வழங்குவதாகவும் தெரிவித்தனர். (ச-இ)

## சீனாவின் பங்களிப்பில் முட்டை 'இன்குபேட்டர்'

சீனாவின் பங்களிப்பில் கிராமப்புறப் பொருளாதாரத்தை வலுப்படுத்துதல் மற்றும் சிறிய அளவிலான கோழிப் பண்ணை உரிமையாளர்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் முட்டை 'இன்குபேட்டர்கள்' விநியோகிக்கப்படவுள்ளன.

இலங்கையின் வேண்டுகோளுக்கு இணங்க, சீனத் தூதுவர் 100 'இன்குபேட்டர்'களை பிரதமரிடம் அலரிமாளிகையில் வைத்துக் கையளித்தார். (ச-இ)

## நாளை

11.12.2023
திங்கட்கிழமை
கார்த்திகை - 25
சுபநேரம் : 12.19 - 01.49
ராகுகாலம் : 07.49 - 09.19

## நாளொரு நல்வார்த்தை

அரசியல் மிகவும் விலை உயர்ந்ததாக மாறிவிட்டது, அதில் தோல்வியடைவதற்குக் கூட நிறையப் பணம் தேவைப்படுகின்றது.

— வில் ரோஜர்ஸ் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## நற்கருணை விழா

மன்னார், டிசெ.10

பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயப் பெருவிழா வில் நவநாள்களில் இறுதி நாள் நற்கருணை விழா கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

பேசாலை பங்குத் தந்தை அருட்பணி எஸ். அன்ரன் அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மன்னார் மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்பணி பி.கிறிஸ்துநாயகம் கலந்துகொண்டு "நற்கருணை யும் நமது வாழ்வும்" எனும் மையப் பொருளில் மறை யுரையாற்றினார். (ரி-60)

# இந்தியா - இலங்கைப் பாலம் உடனடியாக சாத்தியமில்லை

கொழும்பு, டிசெ.10

**உள்கட்டமைப்பு மேம்பாடு, எரிசக்தி இணைப்புகள் மற்றும் வர்த்தகம் ஆகிய துறைகளில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவை மேம் படுத்தவேண்டும் என்று இந்திய ஊடகமான 'த ஹிந்து' தெரிவித்துள்ளது.**

இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் இந்தி யாவுடன் தரைவழி இணைப்பை ஏற்படுத்துவதற்கான முன்மொழிவை மேற்கொண்டிருந்தார். எனினும் அது உடனடியாக நடைமுறைக்கு வரப்போவதில்லை.

முன்னதாக இருபது ஆண்டுக ளுக்கு முன்னரும் சென்னையில், அப்போதைய பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க, இலங்கை யின் வடக்கு மாகாணத்தில் உள்ள தலைமன்னாருடன் தமிழ்நாட்டில் உள்ள இராமேஸ்வரத்தை இணைக் கும் பாலம் கட்டும் யோசனையை முன்வைத்திருந்தார்.

இது பிராந்திய பொருளாதார ஒருங் கிணைப்புப் பற்றிய அவரது பெரிய பார்வையின் ஒரு பகுதியாகும். இது இலங்கையையும் இந்தியாவின் தென் மாநிலங்களையும் உள்ளடக் கியது மற்றும் பொருளாதார வளர்ச் சிக்கு அதிகவாய்ப்புகளைஉருவாக்கு வதை நோக்கமாகக் கொண்டது.

எனினும் சிங்கள - பௌத்தர்களின் நலன்களைப் பிரதிநிதித்துவம் செய் வதாகக் கூறும் குழுக்களும், கட்சி களும் இலங்கைக்கு எந்தப் பயனும் தராது என்ற அடிப்படையில் இந்தத் திட்டத்துக்குத் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றன.

இந்த விரிவுபடுத்தப்பட்ட பௌதீகத் தொடர்பைப் பற்றிய பேச்சு அடியோடு நின்றுவிடுகிறது என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள் ளது. (ஏ-இ)

## மூத்தோருக்கு உதவிப்பொருள்

சாவகச்சேரி டிசெ.10



பன்னாட்டு முதியோர் தினத்தை முன்னிட்டு தென்மராட்சிப் பிரதே சத்தைச் சேர்ந்த 18 மூத்த அங்கத்தவர்க ளுக்குப் பகிரங்க சேவை ஓய்வூதியர் நிதிய தென்மராட்சிக் கிளையினர் தலா 5 ஆயிரம் ரூபா பெறு மதியான பாவனைப் பொருள்களை அண்மையில் அவர்களின் வீடுகளுக்குச் சென்று வழங்கினர்.

கிளையில் கடந்த 2005, 2006 அங்கத்தவர்களாக இணைந்த ஓய்வூதியர்களில் மூத்த அங்கத்தவர்க ளுக்குப்பொருள்கள் வழங்கப்பட்டன. மட்டுவில் மேற்கு, மட்டுவில் கிழக்கு, சரசாலை தெற்கு, சரசாலை வடக்கு, மட்டுவில் தெற்கு, அல்லாரை வடக்கு, சாவகச்சேரி நகரம், மீசாலை வடக்கு, உசன், கைதடி வடக்கு, கரம் பைக்குறிச்சி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மூத்த அங்கத்தவர்கள் 18 பேருக்குப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ரி-9)

## முட்டை விலை அதிகரிப்பு

கொழும்பு, டிசெ.10

பண்டிகைக்காலம் நெருங்கிவரும் நிலை யில் முட்டை விலை யில் கணிசமான அதி கரிப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படு கிறது.

கிறிஸ்மஸ் மற்றும் புதுவருடப்பிறப்பு நெருங்கிவரும் நிலை யில் முட்டைக்கு அதிக கேள்வி எழுந்துள்ளது. முட்டை விலை அதிக ரிப்புடன் கேக் உள் ளிட்ட பொருள்களின் விலைகளும் அதிகரிக் கும் என்று தெரிவிக்கப் படுகின்றது.

அதேவேளை, டிசெம் பர் மற்றும் ஜனவரி மாதங்களில் முட்டை விலை அதிகரிப்பது வழமையான விடய மென அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் கள் சங்கம் தெரிவித் துள்ளது. (ஏ-இ)

# அணிசேராக் கொள்கையால் சரியான பாதையில் இலங்கை

### அரசாங்கம் கூறுகின்றது



கொழும்பு, டிசெ.10

ஜனாதிபதியின் அணிசேரா வெளிநாட்டுக் கொள்கையால் இலங் கையின் வெளிநாட்டு உறவுகளைச் சரியான பாதையில் கொண்டு செல்ல முடிந்துள்ளது. இலங்கை தனது ஒருமைப்பாட்டைப் பாதுகாத்துக்கொண்டு, அனைத்து நாடுகளுடனும் நட்புற வைக் கட்டியெழுப்பி வருகின்றோம் என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

ஒரு தரப்பிடம் சரணடையாமல் அனைத்து நாடுகளுக்கும் நட்புறவின் கரங்களை நீட்டியதன் காரணமாகவே சர்வதேச நாணயநிதியத்தின் ஆதரவை இலங்கை பெற முடிந்ததா கவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் அலி சப்ரி இவ்வாறு கூறினார்.

கடன் மறுசீரமைப்பு மூலம் நாம் செலுத்தவேண்டிய கடனின் அளவைக் குறைக்க முடிகிறது. கடனைச் செலுத்தும் அளவைக் குறைத்து, வட்டியைக் குறைப்பதன் மூலம், நாம் செலுத்தவேண் டிய கடனில் இருந்து பல பில்லியன் அமெரிக்க டொலர் நிவார ணத்தை எமது நாடு பெறும் திறன் உள்ளது என்றும் அவர் தெரி வித்தார். (ஏ-44)



### மின்சாரத்துறையை

# தனியார் மயமாக்க எதிர்க்கட்சி எதிர்ப்பு

கொழும்பு, டிசெ.10

நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களில் சில மறுசீரமைப்புகள் இடம்பெறவேண் டுமானாலும் மின்சார உற்பத்தி, பரிமாற் றம், விநியோகம் போன்ற துறைகளில் இடம்பெறும் மாற்றங்கள் நாட்டின் தேசியப் பாதுகாப்புக்குச் சாதகமாக அமையவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மின்சாரத்துறையானது தேசியப் பாது காப்பைப் பாதிக்கும் விடயமாகவுள்ளதால் இதனை தனியார்மயப்படுத்த இடமளிக்க மாட்டோம் என்றும் அவர் கூறினார்.

மின்சாரத்துறையை தனியார் மயமாக்க அரசாங்கம் முயற்சிகளை மேற் கொண்டு வருவதாகக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படும் பின்புலத்தில் இது தொடர் பில் நேற்று நாடாளுமன்றத்தில் கருத் துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார். (ஏ-இ)

## மர நடுகை



மருதம் பசுமை இயக்கத்தினரால் மாந்தை மேற்கு பிரதேசங்களில் "சூழலைப் பசுமையாக் குவோம்" எனும் தொனிப்பொருளில் நூற்றுக் கணக்கான மரங்கள் அண்மையில் நடப்பட் டன. மருதம் பசுமை இயக்கத்தினரால் கடந்த சில வருடங்களாக ஆயிரக்கணக்கான மரங் கள் வவுனியா, மன்னார் மாவட்டங்களிலும் நடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ரி-75)

## விபத்தில் வாகனங்கள் சேதம்

சாவகச்சேரி, டிசெ. 10

வடிகால் மூடிகள் ஏற்றிவந்த உழவியந்திரத்தின் பெட்டி மோதியதில், மோட்டார்சைக்கி ளொன்று சேதமடைந்தது. இந்தச் சம்பவம் நேற்றுமுந்தி னம் மாலை சாவகச்சேரியில் இடம்பெற்றுள்ளது.


சாவகச்சேரி, நவீனசந்தை வடிகாலில் சேதமடைந்த மூடி களுக்குப் பதிலாகப் பொருத் துவதற்காக மாற்று மூடிகளை ஏற்றிவந்த உழவியந்திரத்தின் பெட்டி மோதியே இந்த விபத் துச் சம்பவித்துள்ளது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 23 . 06 . 1949

இறைவன் அடியில் . 09 . 12 . 2023



## நாகரத்தினம் பாலச்சந்திரன்

வேலணை கிழக்கு. 2ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட வேலணை முத்துமாரியம்மன் தேவஸ்தானம் மற்றும் வேலணை கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவர் மற்றும் முன்னாள் பிரபல வர்த்தகர் (வலம்புரி ரேடர்ஸ், கொழும்பு 11) திரு.நா.பாலச்சந்திரன் அவர்கள் 09.12.2023 அன்று இறைபதம் அடைந்தார். அன்னார் அமரர்களாகிய நாகரத்தினம் செல்லம்மா தம்பதியினரின் சிரேஸ்ட புதல்வனும், காலஞ்சென்ற முத்துலிங்கம் பாக்கியலெட்சுமி தம்பதியினரின் மருமகனும், ஜெயமலரின் அன்புக் கணவரும், சகானா, கஜானா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பவளபாக்கியலெட்சுமி, சண்முகநாதன், இந்திராணி, சரசமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராஜகோபாலன், நாகலெட்சுமி, விமலன், அமரர் யோகநாதன், அமரர் ஜெயரூபன், அமரர் ஜெயகரன், ஜெயதரன் ஆகியோரின் மைத்துனரும், சோபனா, சஜித்தா, சுதாஜினி ஆகியோரின் சகோதரரும், சர்மிளா, சாந்திகா, உமாபிரியதர்சினி, திருஈஸ்வரன், பாலகிருஸ்ணன், அமரர் காண்டீபன், இந்துமதி, பொன்மதி, லோகிதா, சுபோதினி, சாட்சாஜினி, தர்சினி, பிரியதர்சன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக் கிரியைகள் இன்று (10.12.2023) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலணை சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*"அட்டாலும் பால்சுவையில் குன்றாது அளவளாய்*
*நட்டாலும் நண்பு அல்லார், நண்பு அல்லர்*
*கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சாங்கு*
*சுட்டாலும் வெண்மை தரும்"*

**மேலதிக விபரங்களுக்கு:**
**ஜெயமலர் - 077 521 8645**
**சரசமலர் (மதி)-077 270 4218**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 27342) A-1

# மரண அறிவித்தல்

மலர்வு 09 - 07 - 1945

உதிர்வு 08 - 12 - 2023



## பரமகுருநாதன் வடிவாம்பாள்

சில்லாலையை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட பரமகுருநாதன் வடிவாம்பாள் (08.12.2023) அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் வள்ளியம்மை அவர்களின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான துரையப்பா இராசம்மா அவர்களின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற துரையப்பா பரமகுருநாதன் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், துரைசிங்கம், இரத்தினேஸ்வரி அவர்களின் அன்புச்சகோதரியும், குணசிங்கம் (நோர்வே), சசிகலாதேவி, த ன பாலசிங்கம் (ஜேர்மன்) ஜெயசிங்கம் (நோர்வே) காலஞ்சென்ற தர்மகுலசிங்கம் அவர்களின் அன்புத் தாயாரும், வளர்மதி, காலஞ்சென்ற அருந்தவராஜா, சந்திரகுமாரி, துஸ்யந்தி, சுமதி அவர்களின் அன்பு மாமியாரும், வர்ஷினி, மதுசாந், அஸ்வாணி, டர்ச்சனா, டர்சன், டர்சிகன், டக்ஷன், தனுசன், தாட்சாயினி, சர்மிளன், அனிஜினி, அரிஷாந், பிருந்திகா, தரன், கார்த்தீபன், அனுஜன், கெவின்குமார் ஆகியோரின் அன்பு பேத்தியாரும், டயான், அக்ஷத்வியான், யாழினி, அஸ்வத் விஸ்வா, லீடகலா, கதிர் ஆகியோரின் அன்பு பூட்டியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.12.2023) முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக திருவடி நிலை இந்து மாயானத்திற்கு எடுத்து செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளு மாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**074 090 2741**

**சில்லாலை தெற்கு,**
**பண்டத்தரிப்பு.**

(CS 53139)(J-1)

# மூடப்படும் ரயில் பாதை

கொழும்பு, டிசெ.10

வடக்கு ரயில் மார்க்கத்தின் மஹவ மற்றும் ஓமந்தை வரையிலான புகையிரதப் பாதையை நவீனமயப்படுத்தும் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் மஹவ முதல் அநுராதபுரம் வரையிலான பகுதியை நவீன மயப்படுத்துவதற்காக ஜனவரி மாதம் 7 ஆம் திகதி முதல் 6 மாத காலத்துக்கு ரயில் பாதை மூடப்படும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ-இ)

# காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கு முத்தட்டுமட லேன் பகுதியில் 1 3/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (நாற்சந்திக்காணி)

தொடர்புகளுக்கு:- **076 4674 313**

(CS 27317) A-1

# வீடு காணி வாடகைக்கு, விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவலர் வீதி பாப்பையா கடைக்கு அண்மையில் ஐந்து அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உள்ளது. சாவகச்சேரி புகையிரத நிலைய வீதியில் இரு வழிப்பாதையுடன் ஐந்து பரப்பு காணி விற்பனைக்குள்ளது.

**திருமணமண்டபம் மாடி வீடு, ஹோட்டல் கட்ட உகந்த**

தொடர்புகளுக்கு :
**077 790 5438, 021 205 3982**

# மணமகள் தேவை

யாழ் இந்து (V) கிரகபாவம் குறைந்த செவ்வாய் தோஷம் அற்ற 30 வயது நிரம்பிய வணிக முகாமைத்துவ பட்டதாரியும், மூன்று பிரபல வணிக ஸ்தாபனங்களின் உரிமையாளரும் ஆகிய மணமகனுக்கு படித்த அழகிய நற்குணங்களுடைய மணமகளை

தொடர்பு : **075 046 8468**

# 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 07.02.1932

உதிர்வு 10.12.2016

## அமரர் இரத்தினம் சரஸ்வதிப்பிள்ளை

**(ஓய்வு பெற்ற ஆசிரியர்)**

*திதி : ஏகாதசி*

அம்மா!
ஆண்டுகள் நகர்ந்தாலும்
எமைவிட்டு அகலாது உங்கள் அன்பான நினைவு
உங்கள் நினைவுகள் வருகையில்
நாம் நிலைகுலைந்து போகின்றோம்
உங்களை நினைக்காத நாளில்லை
எம்முன் என்றும் நிறைந்துள்ளீர்கள் அம்மா!

குடும்பத்தினர்


# சீனாவின் கப்பலுக்கு 'தடா'

இலங்கைக்கு எதிர்காலத்தில் வரும் கப்பல்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் மேலதிக தகவல்களை கோரும் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்

அனைத்தும் வெளிப்படைத்தன்மையுடன் இடம்பெறுகின்றன. நிலையான செயற்பாட்டு நடைமுறையை நாங்கள் அடிப்படையாகக் கருதுகின்றோம். சீனாவின் மூன்றாவது கப்பலுக்கான ஆராய்ச்சி நடைபெறும் இடங்களை சீனாவே தீர்மானிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனால் நாங்கள் அனுமதி வழங்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார். (எ-இ)

# மரண அறிவித்தல்

## நரசிங்கம் தர்மவரதன்




புன்னாலைக்கட்டுவன் தெற்கு சாரடிவளவைச் சேர்ந்தவரும், மலேஷியாவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், எஜ்வெயார் (**Edgeware London**) ஐ வதிவிடமாகவும் கொண்ட நரசிங்கம் தர்மவரதன் அவர்கள் கடந்த (05.12.2023) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நரசிங்கம் சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும், சுப்பிரமணியம் விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான திருமதி புவனேஸ்வரி திருச்செல்வன், முத்துக்குமாரு, கமலாதேவி, திருமதி சரஸ்வதி பாலசுப்ரமணியம் மற்றும் சிவபாக்கியம், திருமதி மகாலச்சுமி சங்கரப்பிள்ளை, சிவஞானம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான திருமதி மகேஸ்வரி இளையதம்பி, திருமதி பத்மாவதி தம்புநாதன், திருமதி இராஜேஸ்வரி சற்குணநாயகம் மற்றும் நாகேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று (10.12.2023) ஞாயிற்றுக்கிழமை லண்டன் நேரம் முற்பகல் 10.00 மணியளவில் **Hendon** மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 27338) S-1

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லைநகர் நாவலர் பெருமானின் குருபூசை தினநிகழ்வு கடந்த திங்கட்கிழமை [illegible] பூமி ஞான ஆச்சிரமத்தில் தீபாராதனை வழிபாடுகளுடன் இடம்பெற்றன. (ச-66)




80 ஆவது அகவையைப் பூர்த்தி செய்த புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேலுடனான 60 வருட அரசியல் பயணத்தின் அனுபவப் பகிர்வு நிகழ்வு புத்தூர் கலைமதி மக்கள் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. (ச-66)



## தண்டுவான் மாணவி பல்கலைக்கழகத்துக்கு

முல்லைத்தீவு, டிசெ.10

முல்லைத்தீவு, தண்டுவான் வித்தியாலய வரலாற்றில் முதல் தடவையாக மாணவியொருவர் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகியுள்ளார். சிறந்த விளையாட்டு வீராங்கனையான செ.ரிஷபா என்ற மாணவியே சப்ரகமுவ பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகியுள்ளார். இவர் தேசிய பளுதூக்கல், வடக்கு மாகாண மட்ட மல்யுத்தம் யூடோ ஆகிய போட்டிகளில் முதலாமிடமும் தேசிய மல்யுத்தப் போட்டியில் காலிறுதி வரையும் சென்று போட்டியிட்டவராவார். (ச-75)



வவுனியா, புதுக்குளம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் கடந்த க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 9ஏ பெறுபேறுகளைப் பெற்று சாதனை படைத்துள்ளனர். எஸ்.பிரசன்னா, எஸ்.விதுஷாலினி, எஸ்.அக்ஸயா ஆகியோரே இந்தப் பெறுபேற்றைப் பெற்றுப் பாடசாலைக்குப் பெருமைசேர்த்தனர். (ச-75)

## கலாநிதி அகளங்கனுக்கு 'தமிழககாவலன்' விருது

வவுனியா,டிசெ.10

வவுனியாவில் தமிழ்த்துறையில் அரும்பணியாற்றி வரும் தமிழ்மணி அகளங்கனுக்கு 'தமிழ்க்காவலன்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் அமைந்துள்ள ஆறுமுகநாவலர் சிலையடியில் குறித்த நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

காணாமற்போனவர்களின் குடும்பங்களும் தமிழ் விருட்சம் அமைப்பும் இணைந்து நடத்திய இந்த நிகழ்வுக்கு சுவீடன் ஸ்ரீ ஜெயதுர்க்கை அம்மன் ஆலயம் அனுசரணை வழங்கியிருந்தது. (ச-110)





## திருநெல்வேலி சிறுவர் இல்ல மாணவர்கள் சாதனை

யாழ்ப்பாணம், நவ.[illegible]

தேசிய மட்டத்தில் நடைபெற்ற கர்நாடக இசை மற்றும் பரதநாட்டியப் போட்டிகளில் யாழ். முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் திருநெல்வேலி சைவச் சிறுவர் இல்ல மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

வில்லுப்பாட்டு, பல்லியம், கொழுந்து நடனம் ஆகிய போட்டிகளில் முதலாமிடத்தையும் தனி வாத்தியப் (வீணை) போட்டியில் யோ.கிருஷ்ணவேணி இரண்டாமிடத்தையும் பெற்றுச் சாதனை நிகழ்த்தியுள்ளனர். (ச)

## சந்நிதியான் ஆச்சிரமத்தால் வன்னிக்கு உதவிகள்

யாழ்ப்பாணம், டிசெ.10


வடமராட்சி சந்நிதியான் ஆச்சிரமத்தால் கடந்த திங்கட்கிழமை வன்னிப் பகுதிக்குப் பல்வேறு உதவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு, புளிக்கன்குளம் கிராமத்தில் வசிக்கும் பொருளாதாரம் நலிவுற்ற குடும்பம் ஒன்றுக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் வற்றாப்பளை பிரதேசத்தைச் சேர்ந்த பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்ற மாணவி ஒருவருக்கு அடிப்படைச் செலவுகளுக்காக 50 ஆயிரம் ரூபா நிதியும் வவுனியா புதிய கற்பகபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த விசேட தேவைக்குட்பட்ட நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயத்தில் சாதாரணதரத்தில் சித்தியடைந்த மாணவியொருவருக்கு 47ஆயிரம் ரூபா பெறுமதியான துவிச்சக்கர வண்டியும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் வவுனியா, நொச்சிக்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு கண்கள் பார்வையற்ற குடும்பத்தைச் சேர்ந்த நெர[illegible]ளம் பாடசாலை மாணவியொருவருக்கு 47 ஆயிரம் ரூபா பெறுமதியான சைக்கிளும் வவுனியா [illegible]ளர் கண்ணகி வித்தியாலயத்தில் புலமைப் பரிசிலில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கவென 81 ஆயிரம் ரூபா நிதியும் வழங்கிவைக்கப்பட்டது. இந்த உதவிகளை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று கையளித்தார். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 25 . 07 . 1939

மறைவு 10 . 11 . 2023

கடந்த 10.11.2023 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் நடராசா முத்துலிங்கம்

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா பொன்னம்மா தம்பதியினரின் புதல்வனும், சித்திரசேனர் பறுபதம் தம்பதியினரின் பாசமிகு மருமகனும், மகேந்திரநாயகி அவர்களின் பாசமிகு கணவரும், நடராசா தியாகராசா அவர்களின் அன்புச் சகோதரனும், கிருஸ்ணகுமார் (கண்ணன்), உதயகுமார் (பாபு), சந்திரிக்கா (காங்கா), சூரியகுமார் (சூரி), பிறேமானந்த குமார் (பிறேம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜயமாலா (மாலா), வசந்தாதேவி, ரங்கநாதன் (சுவிஸ்), மதிவதனா, சர்மிக்கா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கீர்த்தனா, கிருசாந்தன், பிரிந்தன், சியாணுகா, தருண், வினுசன், டரணித் ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (10.12.2023) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**“இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.”**

இல.214/9, சேர்.பொன் இராமநாதன் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(CS 27343) A-1

## காணி விற்பனைக்கு

வதிரி ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரமத்துக்கு அருகாமையில் அமைந்துள்ள “ஒந்திறாய் துறையடி வயல் (நிலப்பரப்பு 7, குளி 3.48) காணி விற்பனைக்கு உண்டு

தொடர்பு : 077 742 2604, 076 994 6743

## பணியாளர் தேவை

**No 226, Main Street, Jaffna இல் இயங்கி வருகின்ற**
**VV MULTI TRADE (Pvt) LTD க்கு பணியாளர் தேவை**

1. Accoutant (ஆகக் குறைந்த 02 வருட அனுபவம். HNDA Completed or AAT Completrd or CA, CIMA Part Qualification)
2. Account Clerk (A/L இல் Commerce படித்தவர்கள் விரும்பத் தக்கது.

(cs.53119) (N.1)

தொடர்பு: 077 555 2142

## காணிகள், வீடுகள், கடைகள் விற்றல் வாங்கல்

இலங்கையில் எப்பகுதியிலும் (குறிப்பாக யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு) காணிகள், வீடுகள், கடைகள் விற்றல் வாங்கல் தொடர்பாக தொடர்புகொள்ளவும்.

- தென்னை, வயல், மீன்வளர்ப்பு, பண்ணைகளுக்கு தேவையான உறுதி காணி விற்கவும், வாங்கவும்.
- வவுனியா நகரப்பகுதியில் வீடு, கடைகளுடன் கூடிய 1½ பரப்பு உறுதிக் காணிகள் விற்பனைக்குண்டு.

அரச பதிவிற்கு உட்பட்டது
(Goverment register)

077 522 1132, 077 285 4626
V.I.M.P. வங்களாவடி வேலணை.

## மணமகள் தேவை

யாழ். கிறிஸ்தவம் 1982 இல் பிறந்த கொழும்பில் வசிக்கும் Business செய்யும் மணமகனுக்கு படித்த நல்ல குடும்ப பின்னணியுள்ள மணமகள் தேவை. (இந்துக்களும OK)

076 041 0334

## காணி விற்பனைக்கு


வவுனியா - பண்டாரிகுளம் அம்மன் கோவிலுக்கு அருகில்
8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

- வீட்டுத் தொகுதிக்கும் - மருத்துவ மனைக்கும் பொருத்தமான இடம்
- புகையிரத நிலையம் - வங்கிகள் - பஸ்டான்ட், மார்கட் என்பன மிக அருகாமையில்.

(Cs 25812) (N.1)

077 755 1193

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 14 - 05 - 1931

மறைவு 22 - 11 - 2022

### அமரர் சின்னட்டி நடேசு

(திதி : 10.12.2023 - திரியோதசி)

ஆண்டொன்று சென்றதப்பா உங்கள்
அன்பு முகம் கண்டு
அன்பிற்கு இலக்கணமாய் அவனியில் வாழ்ந்தீரே
பண்புடன் பக்குவமாய் எம்மை நடாத்தி
இரக்கத்தின் இருப்பிடமாய் எல்லோர்
மனத்திலும் இடம்பிடித்து
இனியவராய் வாழ்ந்து இவ்வுலகம் நீந்தீரே
நிழலாய் தொடரும் உங்கள் நினைவுடன்.


**இறைவனிடம் என் தந்தையின் ஆத்மா**
**சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.**

சம்பியன் லேன்,
நந்தாவில்,
கொக்குவில்

(CS 527326) (AK.1)

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## நினைவழியாத இரண்டாம் ஆண்டு



தோற்றம் 05 - 12 - 1930

மறைவு 10 - 12 - 2021

அமரர்

### கணபதிப்பிள்ளை சின்னராஜா

சுமந்தீர் சுகமாக
தாங்கினீர் தனியாக
வாழ்கிறோம் வளமாக
மறவோம் மறவோம்
என்றுமே உங்களை

981 / 3, வளன்புரம்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்

(CS 53018) (AK 1)

மறந்திடாத
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
பூட்டப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

யாழிந்து கௌரவகுலம் (V), 1990, பரணி
Engineer Singapore மணமக்னுக்கு
மணமகள் தேவை.
Tel : 0742348099 | 0114380900
No.14 3/1G,37th Lane,Colombo-06.
www.realmatrimony.com

## மணமகன்கள் தேவை

1981 (V) பூராடம், 1997 (V) அவிட்டம்
4 இல் செவ்வாய் பட்டதாரி உத்தியோகம்
விவாகரத்துப்பெற்ற மணமகள்களுக்கு
மணமகன்கள் தேவை.
077 964 9245

## அறை தேவை

O/L பரீட்சையில் 9A பெற்ற மாணவனுக்கு,
A/L விஞ்ஞான பிரிவில் கல்வி கற்பதற்காக
யாழ் நகரில் வகுப்புகள் செல்வதற்காக
தங்கியிருக்க உகந்த அறை தேவை.
(கந்தர்மடம், நல்லூரடி, பெருமாள் கோவிலடி
போன்ற இடங்கள் உகந்தது)
தொடர்புக்கு : +94 77 219 9674

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவகுலம்.(V)
1986 சித்திரை கிரகபாவம். 14 1/4.
செவ்வாய்
2இல். 2ம் பாதம்.
சுயதொழில் செய்யும்
மணமகனுக்கு
மணமகள் தேவை.
தொடர்பு:
0775470631

## காணி விற்பனைக்கு

இராசவீதி கோப்பாய் பொலிஸ்
நிலையத்திற்கு அருகில் 4¼
பரப்பும் புதிதாக கட்டப்பட்ட
வீடும் விற்பனைக்குண்டு.
வீடு தனியாகவும் காணி
தனியாகவும் பிரித்தும்
கொடுக்கப்படும்
074 125 1188

## பிரத்தியேக வகுப்புகள்

A/L இணைந்த கணிதம் 2024, 2025 மாணவர்களுக்கு
வீடு வந்து கற்பிக்கப்படும்.
(Personal and Group)
077 832 4002

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவகுலம், 40 வயது
சொந்தமாக தொழில்புரியும் மணமகனுக்கு
மணமகள் தேவை. சீதனம்
எதிர்பார்ப்பிள்ளை.
(வைவர் & வட்சொப்) 077 905 8615

## மணமகள் தேவை

யாழிந்து கௌரவகுலம் (V), 1990, ரோகினி
Engineer Canada மணமகனுக்கு
மணமகள் தேவை.
Tel : 0742348099 | 0114380900
No.14 3/1G,37th Lane,Colombo-06.
www.realmatrimony.com

## மணமகள் தேவை

யாழிந்து விஸ்வகுலம் 1987,அஸ்தம்
Accountant Australia மணமகனுக்கு
மணமகள் தேவை.
Tel : 0777111786 | 0114380899
No.14 3/1G,37th Lane,Colombo-06.
www.realmatrimony.com

## வீடு விற்பனைக்கு - தெல்லிப்பளை

யாழ்ப்பாணம் தெல்லிப்பளை
வறுத்தலைவிளான் பகுதியில் 3அறை,
ஹோல்,சமையலறை,மலசலகூட
வசதிகளுடன் வீடொன்று அவசரமாக
விற்பனைக்குண்டு. (பகுதியளவு
வேலை மீதமுள்ளது.) விலை
பேசித்தீர்மானிக்கலாம்.
தொடர்பு : 0759232391,0751339294

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, ஜம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிழை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மாங்குஸ்த்தான், ஏலக்கா, சீதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலைவேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு,
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில்
077 612 9343

நியூ லங்கா பாம்
கிளை:
K.K.S. வீதி, இணுவில்

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில்
மாபிள் பதித்து தரப்படும்.
இழுத்து பதிக்க ஒரு சதுர அடி - 85 ரூபாய்
தொடர்பு : 077 334 1281

## தேவை

கோண்டவிலில் இயங்கிவரும்
நிறுவனத்திற்கு பெண்
வடிவமைப்பாளர் தேவை.
(Graphic designer)
தொடர்பு : 077 376 5303

## காணி விற்பனைக்குண்டு

கோப்பாய் மார்க்கம்புரை ஒழுங்கையில்
பிரதான வீதியில் இருந்து 25 m தூரத்தில்
நல்ல குடியிருப்பு சூழலில் அமைந்த
2 பரப்பு 4 குழி விஸ்தீரணமான காணி
விற்பனைக்குண்டு.
(தரகர் தேவையில்லை)
077 691 1888

## PRINTING MACHINES GOOD CONDITION FOR QUICK SALE - IN COLOMBO

* MBO & STAHL FOLDING MACHINES SIZE 24"X36"
* SMALL FOLDING MACHINE - SIZE A3 Two folding
* GUMMING MACHINES- HARD COVER GLUE PASTING MACHINE - SIZE 25"
* DOUBLE HEAD STITCHING MACHINE IDEAL FOR FAST PRODUCTION
* SINGLE HEAD STITCHING MACHINE
* AUTO-SPIRALING MACHINES
* LARGE COMPRESSOR

PLEASE CONTACT : 0772663725
A. CHANTHIRAPALAN

## மலேசியா செல்லும் ரணில்

கொழும்பு, டிசெ.10

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜனவரி மாத பிற்பகு தியில் மலேசியாவுக்கு அரசுமுறை பயணமொன்றை மேற்கொள்ளக்கூடும் என்று அரசின் தகவல் அறியும் வட்டாரங்களில் அறிய முடிகிறது.

தெற்காசிய மற்றும் தென்கிழக்காசிய நாடுகளுடன் வலுவான பொரு ளாதார உறவுகளைப் பேணுவது சமகால அரசாங்கத்தின் நோக்கமாக உள்ளது. அதன் ஒரு கட்டமாக ஜனாதிபதியின் மலேசியாப் பயணம் அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-இ)

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ். சோமசுந்தரம் லேனில் (க்ச்சேரியிலிருந்து
100 M தூரம்) 5 அறைகள், தரிப்பிட வசதியுடன்
கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
077 6623 915

## வான் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள
Van (Foton 10 -10)
விற்பனைக்கு உண்டு
தொடர்பு : 076 556 6263

## வாடகைக்கு

யாழ் வைத்தியசாலை வீதியில்
அமைந்துள்ள 1ம் மாடிக் கடைகள்
வாடகைக்கு உண்டு.
(அலுவலகத்துக்கும் ஏற்றது)
தொடர்புகளுக்கு : 077 162 0626

## மணமகள் தேவை

யாழிந்து கௌரவகுலம் (V), 1994, சதயம்
Analysist France மணமகனுக்கு
மணமகள் தேவை.
Tel : 0777751380 | 0114380899
No.14 3/1G,37th Lane,Colombo-06.
www.realmatrimony.com

## www.EQMarriageService.com ஒன்லைன் திருமணசேவை

Ensured Quality Lanka (Pvt) Ltd
Bambalapity, Colombo 04
CALL 076 664 9401

- ஒரு தசாப்தத்திற்கு மேலான சேவை (2012 ஆம் ஆண்டிலிருந்து)
- வருடத்திற்கு 100இற்கும் மேற்பட்ட திருமணங்கள் நிச்சயம் செய்யப்படுகின்றன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1995, இந்து.<br>மிருகசீரிடம்<br>நயினாதீவு.<br>பட்டதாரி<br>TEACHER<br>மணமகள்<br>பதிவு இல:8249 | 1987, இந்து.<br>பூராடம்,<br>யாழ்ப்பாணம்,<br>பட்டதாரி<br>DOCTOR<br>மணமகள்<br>பதிவு இல:8200 | 1992, இந்து.<br>உத்தரட்டாதி,<br>கரவெட்டி, பட்டதாரி<br>Swallowing Pathologist<br>மணமகள்<br>பதிவு இல:8172 | 1994, இந்து,அனுசம்,<br>வட்டுக்கோட்டை<br>பட்டதாரி<br>MANAGING DIRECTOR<br>மணமகன்<br>பதிவு இல:8334 | 1982, இந்து.<br>கௌரவகுலம் (V)<br>உத்தரம்,<br>பட்டதாரி<br>I.T ANALAYST, CANADA<br>மணமகன்<br>பதிவு இல:8323 | 1990, இந்து.<br>கௌரவகுலம் (V)<br>சதயம், பட்டதாரி<br>ENGINEER, AUSTRALIA<br>மணமகன்<br>பதிவு இல:8279 |
| 1995, இந்து.<br>அஸ்வினி<br>புங்குடுதீவு,<br>பட்டதாரி<br>மணமகள்<br>பதிவு இல:8245 | 1983, இந்து.<br>கேட்டை<br>யாழ்ப்பாணம்,<br>பட்டதாரி,<br>மணமகள்<br>பதிவு இல:8195 | 1993, கிறிஸ்தவம்,<br>அச்சுவேலி,<br>பட்டதாரி<br>LECTURER<br>மணமகள்<br>பதிவு இல:8170 | 1994, கிறிஸ்தவம்,<br>புனர்பூசம்,<br>நவாலி, பட்டதாரி,<br>BUSINESS<br>மணமகன்<br>பதிவு இல:8331 | 1993, இந்து.<br>மூலம், கொக்குவில்,<br>பட்டதாரி<br>ACCOUNTANT<br>மணமகன்<br>பதிவு இல:8312 | 1989, இந்து.<br>பூரம், யாழ்ப்பாணம்,<br>பட்டதாரி<br>DOCTOR<br>மணமகன்<br>பதிவு இல:8274 |
| 1981, இந்து.<br>பூசம்<br>அரியாலை, பட்டதாரி<br>LECTURER<br>மணமகள்<br>பதிவு இல. 8239 | 1996, இந்து.<br>சுவாதி,கல்முனை,<br>பட்டதாரி,<br>DEVELOPMENT OFFICER<br>மணமகள்<br>பதிவு இல:8192 | 1979, இந்து, சித்திரை,<br>யாழ்ப்பாணம்,<br>பட்டதாரி<br>ACCOUNTANT<br>மணமகள்<br>பதிவு இல:8165 | 1991, இந்து.<br>உத்தராடம்,<br>ஏழாலை, பட்டதாரி,<br>BANK<br>மணமகன்<br>பதிவு இல:8330 | 1981, இந்து.<br>கௌரவகுலம் (V)<br>பூசம், பட்டதாரி<br>MANAGER, SWISS<br>மணமகன்<br>பதிவு இல:8307 | 1982, இந்து.<br>சுவாதி, பூநகரி,<br>பட்டதாரி<br>TEACHER<br>மணமகன்<br>பதிவு இல:8267 |
| 1987, இந்து.<br>மஹம்<br>யாழ்ப்பாணம்,<br>பட்டதாரி<br>PLANNING EXECUTIVE<br>மணமகள்<br>பதிவு இல. 8226 | 1989, கிறிஸ்தவம்,<br>யாழ்ப்பாணம்,<br>பட்டதாரி,<br>DOCTOR<br>மணமகள்<br>பதிவு இல:8181 | 1992, இந்து.<br>மஹம்,<br>ஆனைக்கோட்டை,<br>பட்டதாரி<br>TEACHER<br>மணமகள்<br>பதிவு இல:8154 | 1988, இந்து.<br>அவிட்டம், துன்னாலை,<br>பட்டதாரி<br>EXECUTIVE OFFICER<br>மணமகன்<br>பதிவு இல:8326 | 1990, இந்து.<br>அஸ்வினி,<br>யாழ்ப்பாணம்,<br>பட்டதாரி<br>TEACHER, DIVORCED<br>மணமகன்<br>பதிவு இல:8288 | 1989, இந்து.<br>கார்த்திகை,<br>காரைநகர்,<br>பட்டதாரி<br>FINANCE ANALAYST, U.K<br>மணமகன்<br>பதிவு இல:8265 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வேடுவர் நடனத்தில் முதலிடம்

தேசிய தமிழ் மொழித்தினப் போட்டியில் வேடுவர் நடனத்தில் கீழ்ப்பிரிவில் சங்கானை கல்விக் கோட்டத்துக்குட்பட்ட சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் முதலிடத்தைப் பெற்றது. (ரி-125)



முல்லைத்தீவு மல்லாவி மத்திய கல்லூரியில் மாணவிகளுக்கான சுகாதாரம் மற்றும் பாலியல் விழிப்புணர்வு செயலமர்வு அண்மையில் இடம்பெற்றது. செயலமர்வில் மல்லாவி சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் ம. சாந்தமேனன் கருத்துரையாற்றினார். (ச-75)



## ஸ்பைரோமீற்றர் கையளிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 10

ஊர்காவற்றுறை மருத்துவமனைக்கு 5 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்பைரோமீற்றர் மருத்துவர் வாணி பிறேம்ஜித் மற்றும் மருத்துவர் மாலதி வரன் ஆகியோரின் நிதிப்பங்களிப்பு உதவியுடன் தொண்டு நிறுவனமாகிய வன்னி ஹோப் நிறுவனத்தால் கடந்த புதன்கிழமை வழங்கி வைக்கப்பட்டது. (ரி-27)



## நாவலர் நினைவு

யாழ்ப்பாணம், டிசெ.கo

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய நிர்வாகத்தின் ஏற்பாட்டில் நல்லைநகர் நாவலர் பெருமானின் நினைவு நிகழ்வு அவரது குருபூசை தினமான கடந்த திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நல்லூரிலுள்ள ஸ்ரீதுர்க்கா தேவி மணிமண்டபத்தில் ஆலயத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர். சி.சிவலிங்கராஜா "நாவலர் பெருமானால் காக்கப்பட்ட சுதேசிய சைவத்தமிழ்ப் பண்பாடு" எனும் தலைப்பில் சிறப்புரையாற்றினார். (ச-66)



வவுனியா வடக்கு வலய ஒழுங்குபடுத்தலுடன் மாணவர்களுக்கான உள்ளக மேசைப்பந்து பயிற்சி முகாம் வவுனியா நகரசபை உள்ளக அரங்கில் ஆரம்பமாகியுள்ளது. இதில் பல மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றுள்ளனர். (ச-75)




## கலாசாலையில் நாவலர் குருபூசை

யாழ்ப்பாணம், டிசெ.10

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் இந்து மன்றத்தின் ஏற்பாட்டில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை தின நிகழ்வு கடந்த திங்கட்கிழமை கலாசாலை முன்றிலில் கலாசாலையின் முதல்வர் ச. லலீசன் தலைமையில் இடம்பெற்றது.

கலாசாலை வாயிலில் அமைந்துள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து நினைவுகூரப்பட்டு தொடர்ந்து கலாசாலை விரிவுரையாளர்கள் மற்றும் ஆசிரிய மாணவர்கள் மலர் வணக்கம் செலுத்தினர்.

நிகழ்வில் கலாசாலையின் பிரதி முதல்வர் த.கோபாலகிருஷ்ணன் மற்றும் கலாசாலையின் தமிழ்த்துறை விரிவுரையாளர் வேல் நந்தகுமார் ஆகியோர் கருத்துரைகளை ஆற்றினர். (ச-66)



## ஐயப்ப சுவாமியின் சக்தி பூசை வழிபாடு

வவுனியா, டிசெ. 10

வவுனியா- வேப்பங்குளம் அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய ஸ்ரீ அரிஹர சுதன் ஐயன் ஐயப்ப சுவாமியின் மகரஜோதி மண்டல விரத சக்தி பூசை பெருவிழாவும் ஹரிவராசனம் நூற்றாண்டு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு ஐயப்பனுக்கு 108 சங்காபிஷேக கிரியைகளும் இடம் பெறவுள்ளன.

தொடர்ந்து முற்பகல் 9.30 மணியளவில் ஐயப்பசாமிகளின் பாதபூசைகளும் அனைத்து மாவட்டங்களிலிருந்து வருகை தரும் குருசாமி மார்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளன என்று ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (ச)

## இடர்முகாமைப் பயிற்சி

திரிசாரணர்களுக்கான முதலுதவி மற்றும் முகாம் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சியளிப்பு யாழ்ப்பாண இடர் முகாமைத்துவ நிலையத்தால் அண்மையில் நடத்தப்பட்டது. இடர் முகாமைத்துவப் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தலைமையில் இந்த நிகழ்வு இடம் பெற்றது. (ச-27,125)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிசெ.10
வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் உத்தியோகத்தர்களுக்கான உளவளக் கருத்தரங்கு சுன்னாகத்தில் அமைந்துள்ள சபை மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் உளவள ஆலோசகர் நா.நவராஜ் வளவாளராகக் கலந்துகொண்டார். (ரி-66)




### வீடுகள் கடைகள் வாடகைக்கு

யாழ் நகரில் வீடுகள்.கடைகள். களஞ்சிய சாலைகள். படிக்கும் மாணவர்களுக்கான அறைகள் மற்றும் சுற்றுலாபயணிகளுக்கு நாளாந்த, வாராந்த நவீன மயத்திலான வீடுகள், தனி அறைகள் வாடகைக்கு உண்டு.

தொடர்பு :0773450039 /0773480039
0753480072


## பிரிவுபசார நிகழ்வு

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கற்கை நெறியைப் பூர்த்தி செய்த 96 ஆசிரிய மாணவர்களின் பிரிவுபசார வைபவம் முதலாம் வருட ஆசிரிய மாணவர்களின் ஏற்பாட்டில் ஆசிரியர் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் நடைபெற்றது.
கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஆசிரிய மாணவர்களும், விரிவுரையாளர்களும் பல்வேறு கலை நிகழ்வுகளைநிகழ்த்தினர். (ரி-66)






### வேலைவாய்ப்பு

சிறந்த அனுபவமுள்ள சிகை அலங்கரிப்பாளர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு நீங்கள் உறவுகளைப் பிரிந்து வெளிநாடு செல்ல வேண்டாம். வெளிநாட்டு சம்பளத்துடன் வேலை. அனுபவமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.



0779143669



### வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 18 . 07 . 1947



மறைவு 10 . 11 . 2023

**அமரர் தங்காராஜா துரைராஜா**

கடந்த (10.11.2023) அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரது 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (10.12.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து பல்வேறு வழிகளிலும் உதவிய உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

35/2, குமாரசாமி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
021 222 1139


## ஆகாயத்...

அதிர்ஷ்ட மூங்கிலைத் தொடர்ந்து வாஸ்துவின் பெயரால் இப்போது ஆகாயத்தாமரை வீடுகளுக்குள் நுழைய ஆரம்பித்துள்ளது. அந்நிய நீர்க்களையான ஆகாயத் தாமரையை அதிர்ஷ்டம் தரும் தாவரமாகப் பலரும் வீடுகளில் நீர்த்தொட்டிகளில் வளர்க்க ஆரம்பித்துள்ளார்கள். பூச்செடிகள் விற்பனையாளர்களும் பின்விளைவுகளை அறியாது இதனை விற்பனை செய்யத்தொடங்கி உள்ளார்கள். இந்தப்போக்கு மிகவும் ஆபத்தானது. மூடநம்பிக்கை சூழற்பேரழிவுகளை ஏற்படுத்தும் - என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

ஆகாயத் தாமரை வீடுகளில் வளர்க்கப்படுவது தொடர்பாக பொ.ஐங்கரநேசன் விடுத்திருக்கும் ஊடக அறிக்கையிலே இவ்வாறு எச்சரித்துள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

அந்நிய ஆக்கிரமிப்புத் தாவரமே ஆகாயத்தாமரை. ஆகாயத்தாமரை தென் அமெரிக்காவைத் தாயகமாகக் கொண்ட ஒரு அசுர நீர்க்களை. நீரே தெரியாத அளவுக்கு விரைந்து மூடிவளரும் ஆற்றல் பெற்றவை. இதனால், நீர்ச்சூழற் தொகுதியில் ஏனைய உயிரினங்களின் வளர்ச்சியைப் பாதிப்பதோடு, நுளம்புகளின் பெருக்கத்துக்குக் காரணமாக அமைந்து விடுகின்றன. குளங்களில் இருந்து தப்பிச்செல்லும் இக்களை வயல் நிலங்களில் பல்கிப்பெருகி நெல் உற்பத்தியில் பெரும் வீழ்ச்சியை ஏற்படுத்தி வருகிறது.

இதனால், இலங்கை அரசாங்கம் ஆகாயத் தாமரையை அந்நிய ஊடுருவல் ஆக்கிரமிப்பு இனமாகக் கருதி அழிக்கத் தலைப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் ஆரியகுளத்திலிருந்து இதனை முற்றாக அகற்றுவதற்கு மிகப் பெருந்தொகைப் பணமும் பெருங்காலமும் எடுத்தது என்பது நினைவிற் கொள்ளத்தக்கது. இன்னும் ஏராளமான குளங்கள் ஆகாயத் தாமரையின் ஆக்கிரமிப்புக்குள் திணறிக்கொண்டிருக்கும் நிலையில் அதிர்ஷ்ட தேவதை என்ற அந்தஸ்தை வழங்குவது அதற்கு அசுரப் பலத்தைப் பெற்றுக்கொடுத்துவிடும். வீடுகளிலிருந்து தவறுதலாக வெளியேறும் இதன் சிறு அரும்பே அதன் பல்கிப்பெருகும் ஆற்றலால் சூழலை அதன் ஆக்கிரமிப்பின் கீழ் விரைந்து கொண்டுவந்துவிடும். ஏற்கனவே பார்த்தீனியம், சீமைக்கருவேலம், இப்பில்இப்பில் போன்ற அந்நியத் தாவரங்களால் அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் எம் நிலம் ஆகாயத் தாமரையினாலும் வலிகளைச் சுமக்க நேரிடும். எமது விவசாயத் திணைக்களம் ஆகாயத் தாமரை தொடர்பான விழிப்புணர்வைச் சமூகத்தின் சகல மட்டங்களிலும் ஏற்படுத்த முன்வரவேண்டும் - என்றுள்ளது. (அ-ஒ-இ)


### துயர் பகிர்கின்றோம்



பிறப்பு: 23.06.1949 இறப்பு: 09.12.2023

வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன்
கோவில் முன்னாள் தலைவர்


**நாகரத்தினம் பாலச்சந்திரன்**

அவர்களின் திடீர் இறப்பினால் துயரமடைந்து இருக்கும் அவரின் குடும்பத்தினர். உற்றார். உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் ஆலய பரிபாலன சபை சார்பில் ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவிப்பதுடன் துயரில் பங்கு கொள்வதுடன். அவரின் ஆத்மா எல்லாம் வல்ல பெருங்குளம் முத்துமாரி அம்மன் பாதார விந்தங்களை அடைய பிரார்த்திக்கின்றோம்.

துயரில் பங்குகொள்ளும்

பரிபாலன சபையினர்
வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பால்நிலைசார் வன்முறைகளிலிருந்து தற்காப்பு மற்றும் வன்முறை தொடர்பில்நாடவேண்டியஇடங்கள்தொடர்பில்விழிப்புணர்வூட்டும் நிகழ்வு சுதுமலை தெற்கு, சுதுமலை வடக்கு கிராம அலுவலர் பிரிவுகளில் அண்மையில் நடைபெற்றது. (எ-66)



மடு பிரதேச செயலகம் மற்றும் வடமாகாண சமூக சேவைகள் திணைக்களமும் இணைந்து நடத்திய பிரதேச மட்ட மாற்றுத்திறனாளிகள் தினம் அண்மையில் பிரதேச செயலாளர் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. (ச-75)



வவுனியா வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட ஒளிவிழா அண்மையில் நகர புனித அந்தோனியார் ஆலய மண்டபத்தில் சிறப்புற இடம்பெற்றது. (ச-75)

## தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு

வவுனியா வடக்கு வலயத்தின் கருங்காலிக்குளம் அ.த.க. பாடசாலை மாணவி ர.சதுர்சிகா மாகாணமட்டத்தில் இடம்பெற்ற 2023ம் ஆண்டுக்கானஇரண்டாம் மொழி (சிங்களம்) எழுத்தாக்கப் போட்டியில் தேசியமட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளார். (ரி-75)



## தென்மராட்சி வலய தமிழ் மொழித்தினம்

யாழ்ப்பாணம், டிசெ.10

தென்மராட்சி கல்வி வலயத்தின் தமிழ்மொழித்தின நிகழ்வு அண்மையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த. கிருபாகரன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் வே.ஞானசம்பந்தன் கலந்துகொண்டார். நிகழ்வில் தேசிய, மாகாண மட்டப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். (ச-159)





ஊர்காவற்றுறை புனித அந்தோர் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு கடந்த வாரம் கல்லூரியின் அதிபர் அருட்திரு எம்.அன்ரன் அமலதாஸ் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர் அருட்கலாநிதி பி.ஜே.ஜெபரட்ணம் பங்கேற்றார். (ச-27)





மன்னார் - நானாட்டான் பிரதேச செயலாளர் தலைமையில் பிரதேச பண்பாட்டுப் பெருவிழாவும் கலைஞர்கள் கௌரவிப்பும் கடந்த மாதம் சிறப்பாக நடைபெற்றது. (ச-75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளைமோர்...

மன்னார், தேவன்பிட்டி ,வெள்ளாங்குளத்தைச் சேர்ந்த ஆரோக்கியநாதன் சவேரியான் (ஜோன்சன்) (வயது - 48) என்ற முன்னாள் போராளியும், நாச்சிக்குடா, கரக்குன்றைச் சேர்ந்த தம்பு குணசேகரம் (வயது - 63) ஆகிய இருவருமே பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தம்பு குணசேகரம் வைபர் (படகுகள் செய்யவதற்குப் பயன்படும் பொருள்) ஒட்டுவேலை செய்பவர். அவரின் வீட்டிலிருந்து கிளைமோர் அச்சு வைபரில் செய்யப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு அச்சு வார்ப்பதற்கு ஜோன்சனே கேட்டுக்கொண்டதாக, தம்பு குணசேகரம் விசாரணைகளின்போது தெரிவித்துள்ளார்.

பூக்கன்றுகள் வளர்க்கும் தொங்கும் பூந்தொட்டியாகப் பயன்படுத்துவதற்கு என்று கூறியே அதனை அச்சு வார்க்குமாறு ஜோன்சன் தெரிவித்ததாகவும், அவ்வாறு வார்க்கப்பட்ட அச்சுக்களை அவர் எடுத்துச் சென்றாரெனவும் தம்பு குணசேகரம் விசாரணைகளின் போது குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை- தான் வைபரில் செய்யப்பட்ட கிளைமோர் அச்சுக்களை எடுத்துச் செல்லவில்லை என ஜோன்சன் விசாரணைகளின்போது தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் மேலதிக விசாரணைகளுக்காக பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் ஜோன்சனை கொழும்புக்கு நேற்றிரவு அழைத்துச் சென்றுள்ளனர். தம்பு குணசேகரம் கிளிநொச்சியில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்.

ஜோன்சன் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் பணியாற்றி வருகின்றார். மாவீரர் வாரத்தை முன்னிட்டு மாவீரர் பெற்றோர் கௌரவிப்பை அவர் முன்னின்று நடத்தியதாகவும் அது தொடர்பில் புலனாய்வாளர்கள் ஊரில் தகவல்களைத் திரட்டியதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை - மாவீரர் நாள் கடைப்பிடிப்புடன் தொடர்புடைய 10 பேர் வடக்கு - கிழக்கில் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-ஒ-26-113)


### காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வீதி, இருபாலைச் சந்தியிலிருந்து 1 KM தூரத்தில் கோப்பாய் வலிகாமம் கிழக்கு உப பிரதேச சபைக்கு அருகாமையில் 7 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
(விலை பேசித் தீர்மானிக்கப்படும்)
T.P:077 801 4335

### கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, சத்திரத்துச் சந்தியில் மூன்றுமாடி கடைக்கட்டடம் சகல வசதிகளுடன் வாடகைக்குண்டு.
077 647 6676 077 9586 996

### காணி விற்பனைக்கு

ராஜபாதை வீதி, கரந்தன் - இராமபிள்ளை வித்தியாலய முன் வீதியில் (மிக அண்மையில்) 11 பரப்புத் தோட்டக்காணி விற்பனைக்கு உள்ளது.
075 970 1948, 077 307 5198

### வேலையாள் தேவை

வெளிநாட்டு நிறுவனம் ஒன்றிற்கு சிங்களம் ஆங்கிலம், கணனி அறிவுடையோர் தேவை.
தொடர்பு : 077 601 1135, 077 703 7058

### விற்பனைக்கு

35 நாள் நிரம்பிய பொம்மேரியன் நாய்க்குட்டிகள் மற்றும் 6 மாதங்களே ஆன ஊர்சேவல் விற்பனைக்கு உண்டு
தொடர்புக்கு : 077 101 6407

### கணிதம் - பிரத்தியேக வகுப்பு

**தரம் 4 முதல் 11 வரை**
கணித பாட பிரத்தியேக வகுப்பு கொடுக்கப்படும்
தொடர்பு : 077 482 0558

### தேவை

வீட்டில் இருந்து நெல்லியடியில் முதியவரை பார்ப்பதற்கு பெண் தேவை முன் அனுபவம் அவசியம் தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு : 071 375 9488, 077 611 6551

### பெண் வேலையாள் தேவை

வீட்டு வேலை பார்ப்பதற்கும் 3 வயது குழந்தையை பராமரிப்பதற்கும், தங்கி நின்று அல்லது போய்வரக் கூடிய வேலையாள் தேவை.
(சம்பளம் 30.000 - பேசித்தீர்மானிக்கலாம்)
077 078 4411, 077 659 3951

### SPOKEN ENGLISH WITH GRAMMAR

யாழ் இந்துக்கல்லூரி வீதியில்
**தனி, குழு வகுப்பு**
**ஆண்டு 7 to GCE OL, AL,**
**பட்டதாரிகள் - தொழில்புரிவோர்.**
K.Ganesh B.A 077 766 8725

### பெண் வேலையாள் தேவை

யாழ்நகரில் இயங்கிவரும் புத்தக, போட்டோ கொப்பி கடைக்கு அனுபவமுள்ள / அனுபவமற்ற வேலையாள்கள் தேவை.
(யாழ்நகருக்கருகிலுள்ளோர் விரும்பத்தக்கது.
076 832 3682

### மோட்டார் வாகனம் விற்பனைக்கு

2018 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட TVS Wego Bgo xxxx இலக்கமுடைய தனிப்பட்ட பாவனையில் உள்ள மோட்டார் வாகனம் விற்பனைகுண்டு. (1st Owner)
070 376 5303

### காணி விற்பனைக்கு

- நிலாவரைக்கு அண்மையில் நவக்கிரி புத்தூர் வீதியோரமாக 46 பரப்பு தோட்டக்காணி.
- நாவலர் வீதியையும், கச்சேரி நல்லூர் வீதியையும் முகப்பாகக் கொண்ட 3 ¾ பரப்புக் காணி.
- தெல்லிப்பளை வைத்தியசாலை வீதி முகப்பாக 3 ¾ பரப்பு காணி

contact no : Divakar Thavavinayagan
+94 77 221 6683

### காணி விற்பனைக்கு

நல்லூர் கோவிலில் இருந்து 2 km தூரத்தில் 04 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

**நிலப்பரப்பு**

- பிரதான இராசபாதையும் G.P.S. விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
- 18 அடி பாதையுடன்.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் இரண்டு துண்டுகள் உள்ளது.

திருமண மண்டபங்கள் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் வீடுகள், கட்டுவதற்கு உகந்த இடம்.

- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்று.

பார்வையிடும் நேரம்:- காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

தொடர்புகளுக்கு:- **ஜெயம்**
077 814 7389,077 986 5457

### காணி விற்பனைக்கு

ஆனைக்கோட்டை குளப்பிட்டி வீதியில் இருந்து 100 m இல் 8 பரப்பு காணி விற்பனைக்குள்ளது. 2 துண்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. புதிதாக நிர்மாணிக்கப்பட்ட குடியிருப்பிற்கு சிறந்த காணி **பதிவுகளுக்கு முந்துங்கள்**
1 பரப்பு 60 லட்சம்
தொடர்பு : 077 411 8851

### வெல்டிங் வேலையாளர் தேவை

நாவற்குழியில் இயங்குகின்ற தனியார் நிறுவனம் ஒன்றிற்கு தேர்ச்சிபெற்ற வெல்டிங் வேலையாள் தேவை

* தங்குமிடம் இலவசம்
* சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்
* வயதெல்லை - (30 - 50)

தொடர்பு : 077 068 5170

### வேலையாள்கள் தேவை

சுன்னாகத்தில் புடைவைக் கடையொன்றிற்கு வேலையாள்கள் தேவை. (ஆண், பெண் இருபாலாரும் தொடர்புகொள்ளலாம்) (சுன்னாகத்தை அண்டிய பிரதேசத்தில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது) அனுபவமுள்ள மற்றும் பழக விரும்புவோரும் ஏற்றுக்கொள்ளப்படும். (cs 27334(2.6)
077 456 9678

### வேலையாட்கள் தேவை

கிளிநொச்சியிலுள்ள மாட்டுப்பண்ணைக்கு நன்கு அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை. சிறிய குடும்பம் விரும்பத்தக்கது
சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.
077 538 1642

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A-9 வீதி முகப்புடன் 30 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

* 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
* **நிலப்பரப்பு,** நன்னீரூற்று
* 20 அடிப்பாதையுடன்
* சித்த மருத்துவமனைக்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
* யாழ். பஸ்நிலையத்திலிருந்து 6 KM தூரம்
* நல்ல சூழல், குடியிருப்புகள் சூழவுள்ள காணி
* நன்னீர் ஊற்று நிலம்
* தரகர் தேவையில்லை.
* **பார்வையிடும் நேரம்:** காலை 6.00 - மாலை 6.00 மணிவரை.

தொடர்பு: 071 173 3911
076 853 5022
076 213 7239
(CS 27307) A-1


## மரண அறிவித்தல்

### பொன்.கதிரேசு

சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னர் கதிரேசு அவர்கள் நேற்று (09.12.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னர் இலக்குமி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை, செல்லையா, வேலுப்பிள்ளை, பார்வதி மற்றும் செல்லம்மா, சிவகாமி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2023) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிளாக் வீதி, சங்கானை.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 27347) S-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

> அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்
> எந்தையும் உடையேம் எம்குன்றும் பிறர்கொளார்
> இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்
> வென்றுஎறி முரசின் வேந்தர்எம்
> குன்றும் கொண்டார்யாம் எந்தையும் இலமே
>
> - புறநானூறு

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2053 கார்த்திகை 24 ஞாயிற்றுக்கிழமை (10.12.2023) சிகரம் : 177

# தமிழரசுக் கட்சி உடையுமா?

நிலாந்தன்

தமிழரசுக் கட்சியின் தலைவர் யார் என்பதைத் தெரிவு செய்வதற்கு வரும் ஜனவரி மாதம் தேர்தல் நடக்கவிருக்கிறது. தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள பெரிய கட்சி அது. அந்தக்கட்சியின் தலைவரை இதுவரை காலமும் தேர்தல் இன்றி ஏகமனதாகத் தெரிவு செய்து வந்தார்கள். அதாவது போட்டிக்கு ஆள் இருக்கவில்லை. ஆனால் இம்முறை போட்டி ஏற்பட்டிருக்கிறது. இந்தப்போட்டிக்குக் காரணம் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் அந்தப் பதவியை அடைய விரும்புவதுதான்.

கடந்த 14 ஆண்டுகளாக தமிழரசுக் கட்சியின் பட்டத்து இளவரசர் போல சுமந்திரனே தோன்றினார். அதை நோக்கி அவர் தன்னை வளர்த்துக் கொண்டார். உள்ளூராட்சிச்சபை, மாகாணசபை போன்ற எல்லா மட்டங்களிலும் அவர் தன்னுடைய ஆதரவுத் தளத்தைப் பெருக்கிக் கொண்டார். அதற்கு முது தலைவராக இருந்த சம்பந்தரின் ஆசீர்வாதமும் இருந்தது. அதாவது பல ஆண்டுகளாகத் தலைமைப் பதவியை இலக்கு வைத்து திட்டமிட்டு உழைத்தவர் சுமந்திரன்.

அவரிடமிருந்த மொழிப்புலமை, சட்டப் புலமை, நிதிப்பலம் போன்றவை காரணமாக அவர் திட்டமிட்டுத் தன்னுடைய நிலையைப் பலப்படுத்தி வந்தார். சிறீதரன் அவருக்குச் சவாலாக எழாதவரை அவர்தான் ஏகமனதாகத் தெரிவு செய்யப்படவேண்டிய ஒரு தலைவர். கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது சிறீதரனும் அவரும் இணைந்து செயற்பட்டார்கள். சிறீதரன் சுமந்திரனை அன்ரன் பாலசிங்கத்துக்கு நிகரானவர் என்றும் வர்ணித்தார். அது கடுமையான விமர்சனங்களை ஏற்படுத்தியது. கட்சிக்குள் சுமந்திரனின் எழுச்சி என்பது கடந்த 14 ஆண்டுகளிலும் படிப்படியாகத் திட்டமிட் டுக் கட்டியெழுப்பப்பட்ட ஒன்று. சம்பந்தர் அதைத் தொடங்கி வைத்தார். கட்சியைத் தீவிரவாத நீக்கம் செய்யவேண்டும், சிங்கள மக்களின் நன்மதிப்பை வென்றெடுக்கவேண்டும் என்றெல்லாம் சிந்தித்து சம்பந்தர் உள்ளே கொண்டு வந்தவர்தான் சுமந்திரன். ஆயுதப் போராட்டமானது சிங்கள மக்களைப் பகை நிலைக்குத் தள்ளிவிட்டது என்று சம்பந்தர் கருதினார். ஒரு தீர்வைப் பெறுவதாக இருந்தால் சிங்கள மக்களின் ஒப்புதல் அவசியம் என்றும் அவர் நம்பினார். எனவே சிங்கள மக்களின் மனங்களை வென்றெடுப்பதற்கு கொழும்பை மையமாகக் கொண்ட மொழியாளுமை கொண்ட சுமந்திரன், விக்னேஸ்வரனைப் போன்றவர்கள் அவசியம் என்றும் அவர் நம்பினார். எனவே சுமந்திரன், விக்னேஸ்வரன் போன்றவர்களை சம்பந்தர் கட்சிக்குள் இறக்கியமை என்பது தற்செயலானது அல்ல. அவரிடம் அதற்கென்று தெளிவான ஒரு வழிவரைபடம் இருந்தது. அதன்படியே காரியங்கள் முன்னெடுக்கப் பட்டன. அதனால்தான் சுமந்திரன் பட்டத்து இளவரசராக மேல் எழுந்தார்.

ஆனால் சம்பந்தரின் வழி தோற்றுவிட்டது. அவர் எதிர்பார்த்ததுபோல ஒரு தீர்வைப் பெறமுடியவில்லை. அதுமட்டுமல்ல, அவர் உள்ளே இறக்கிய விக்னேஸ்வரன் அவருக்கு எதிராகத் திரும்பினார். அதன்பின் இறக்கப்பட்ட குகதாசன் எதிராகத் திரும்பி விட்டார். சாணக்கியர் கூறியது போல சுமந்திரன் "நண்டாக" மாறிவிட்டார்.

"இளவரசர்கள் நண்டுகளைப் போன்றவர்கள். அவர்கள் தகப்பனைத் தின்னிகள்" என்று சாணக்கியர் கூறுவார். மொத்தத்தில் சம்பந்தர் ஒரு தோல்வியுற்ற தலைவராக ஓய்வு பெறப் போகின்றாரா? ஆனால் அவர் தமிழ் அரசியலைச் சீரழித்துவிட்டார். கடந்த 14 ஆண்டுகளில் அவரால் உருப்படியான ஒரு தீர்வைப் பெற்றுத் தரமுடியவில்லை. கூட்டமைப்பு என்ற ஐக்கியக் கட்டமைப்பையும் பாதுகாக்கமுடியவில்லை. அவருடைய வாரிசுகளே அவரைத் தூக்கி எறியும் ஒரு நிலை.

அவர் கடந்த 14 ஆண்டுகளாக திட்டமிட்டு முன்னெடுத்த அரசியல் வழியின் விளைவாக அவருடைய சொந்தக் கட்சிக்குள்ளேயே சிதைவுகள் தொடங்கிவிட்டன. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் சிறீதரன் சுமந்திரனின் முக்கியத்துவத்தை ஏற்றுக்கொண்டிருந்தார். அதனால்தான் சுமந்திரனை அன்ரன் பாலசிங்கம் என்றும் வர்ணித்தார். ஆயின் இப்பொழுது சிறீதர னுக்கும் சுமந்திரனுக்கும் இடையே ஏற்பட்டிருப்பது தனிப்பட்ட முரண்பாடா? அல்லது, கொள்கை முரண்பாடா? கூட்டமைப்புத் தேய்ந்து தமிழரசுக் கட்சியாகியதற்கு சுமந்திரனையே பலரும் குற்றஞ்சாட்டுவதுண்டு. சிறீதரனின் செல்வாக்கு அடித்தளமாகக் காணப்படும் கிளிநொச்சிக்குள் சுமந்திரன் தனக்கு ஆதரவான ஒரு சிறு அணியை உருவாக்கி வைத்திருக்கிறார். ஏற்கனவே சிறீதரனோடு இருந்தவர்கள் அவர்கள். சிறீதரனின் கோட்டைக்குள் சுமந்திரன் ஊடுருவ முற்பட்டமையும், முரண்பாடுகள் தீவிரமடைய ஒரு காரணம். முதலில் இருவருக்கும் இடையிலான அடிப்படை வேறுபாடுகளை பார்க்கலாம். சுமந்திரன் புரட்டஸ்தாந்துப் பாரம்பரியத்தில் வந்தவர். கொழும்புமைய வாழ்க்கைக்கு அதிகம் பழக்கப்பட்டவர். கொழும்புமைய உறவுகளைக் கொண்டவர். ஒரு தமிழ் மக்களின் பிரதிநிதியாக கொழும்பில் தன் செல்வாக்கை

08 »



புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அ.நிக்ஸன்



# ஒரு விவாதமும் ஈழத்தமிழர்களும்

ஈழத்தமிழர் விவகாரம் குறித்து பிரித்தானிய நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் இலங்கைத்தீவில் நல்லிணக்கம், மத நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைப் பாதுகாப்பு என்ற பேச்சுகளுக்கு மாத்திரமே முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்தது. தமிழர்கள் ஒரு 'தேசிய இனம்' என்பதும், கட்டமைக்கப்பட்ட "இன அழிப்பு" தொடர்கிறது என்ற நியாயமான கருத்தும் விவாதத்தில் சேர்க்கப்படவில்லை. ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான அவசியம் மற்றும் இன அழிப்பு என்ற வாதத்தைச் சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எடுத்துரைத்திருந்தாலும் பிரித்தானிய அரசாங்கம் அதற்குப் பதில் வழங்கவில்லை.

ஈழத்தமிழர்கள் குறித்த விவாதம் ஸ்கொட்லாந்து தேசியக் கட்சியின் (Scottish National Party) நாடாளுமன்ற உறுப்பினர் மார்ட்டின் டே தலைமையில் இடம்பெற்றிருந்தது. வன்முறை மற்றும் இனப்படுகொலையின் சுழற்சியுடன் துரதிர்ஷ்டவசமாகத் தொடர்ந்தும் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் நிகழ்வுகள் உயிர் பிழைத்த தமிழர்களை மேலும் துன்புறுத்துவதாக மார்ட்டின் டே தனது விவாதத்தில் சுட்டிக்காட்டியிருக்கிறார். ஈழத்தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்கும் தொழிற் கட்சி உறுப்பினர்கள் பலரும் இந்த விவாதத்தில் பங்குபற்றினர். ஆனால் விவாதத்தில் உரையாற்றிய பிரித்தானிய அரசதரப்பு உறுப்பினர்கள் பலரும் இலங்கைத்தீவில் நடப்பது மனித உரிமை மீறல் விவகாரம் என்ற தொனியிலும் இலங்கை ஒற்றையாட்சி அரசைப் பாதுகாக்கும் முறையிலும் கருத்துகளை அதிகளவில் முக்கியப்படுத்தியிருந்தனர்.

இந்த விசேட விவாதம் நாடாளுமன்றத்தின் வெஸ்ட் மின்ஸ்டர் மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பிரித்தானிய நேரப்படி பிற்பகல் 2.30 தொடக்கம் 4.30 வரை இடம்பெற்றது. இலங்கை அரசாங்கம் தற்போது மீண்டுமொரு உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை (Truth and Reconciliation Commission) உருவாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. ஆனால் இது பொறுப்புக்கூறலுக்கான பாதையையோ அல்லது உரிய சாட்சியங்களுடனான பாதுகாப்புப் பொறிமுறையையோ ஏற்படுத்தாது என்ற நிலையே காணப்படுவதாக மார்ட்டின் டே விவாதத்தில் எடுத்துரைத்திருந்தார். ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமை அவசியமானது என்றும் மார்ட்டின் டே தனது விவாதத்தில் நியாயப்படுத்தியிருந்தார்.

உறுப்பினர்களின் உரைகள் முடிவடைந்த பின்னர் வெளிவிவகார பொதுநலவாய விவகாரங்களுக்கான அமைச்சர்களில் ஒருவரான லியோ டொச்செட்ரி பதிலளித்தார்.

ஆனால் இலங்கை அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலின்மை உள்ளிட்ட முக்கியமான விவகாரங்களுக்கு அமைச்சர் லியோ டொச்டெரி பதிலளிக்கவில்லை. ஆனாலும் சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளையும் மீறி இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்துவதாக அமைச்சர் லியோ டொச்செரி குற்றம் சுமத்தினார்.

இலங்கைத்தீவில் "இன நல்லிணக்கம்" "மத நல்லிணக்கம்" ஏற்பட வேண்டும் என்பது பற்றியும் அமைச்சர் தனது பதிலில் முக்கியப்படுத்தியிருந்தார். இன அழிப்பு மற்றும் சுயநிர்ணய உரிமை பற்றிய கேள்விகளுக்கு அமைச்சர் லியோ டொச்செரி தனது பதிலில் கவனம் செலுத்தவில்லை.

மாறாக இலங்கை ஒற்றையாட்சி அரசைக் காப்பாற்றும் உத்திகள் அமைச்சரின் பதிலில் தென்பட்டன. மனித உரிமைகள் விடயத்தில் பிரிட்டனின் கரிசனைக்குரிய 32 நாடுகளில இலங்கையும் ஒன்று என்ற விடயத்தில் பிரித்தானியா கவனம் செலுத்தி வருவதாக அமைச்சர் தனது பதிலில் மேற்கோள் காண்பித்திருந்தார்.

ஈழத்தமிழர்கள் பற்றி உறுப்பினர்கள் மனதை வருத்தும் விதத்தில் வலுவான விவாதங்களை இங்கு முன்வைத்ததாகவும் குறிப்பிட்ட அமைச்சர் லியோ டொச்செரி, இலங்கையில் பல வருடகாலமாக இன, மதப் பதற்றங்கள் நிலவுவதாகவும் , தமிழர்கள் புறக்கணிக்கப்படுவதும் ஒடுக்குமுறைக்குள்ளாக்கப்படுவதும் பிரித்தானியாவுக்கு நன்கு தெரியும் எனவும் எடுத்துரைத்தார். பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கிவிட்டு சர்வதேச தராதரத்தில் புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவது குறித்து இலங்கை அரசு வாக்குறுதி வழங்கியிருந்தது. ஆனாலும் பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுவது குறித்து பிரித்தானிய அரசாங்கம் அவதானித்துள்ளது என்றும் அமைச்சர் தனது பதிலில் கூறினார். அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் மற்றும் நினைவுகூரலுக்கு எதிரான பொலிஸாரின் கடுமையான நடவடிக்கைகளும் இடம்பெற்றுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியிருந்தார். தமிழ் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களை இலக்குவைத்து வடக்கு - கிழக்கில் இலங்கைப் படையினரின் கண்காணித்தல்கள், மிரட்டல்கள் தொடர்வதாகவும் அமைச்சர் தனது பதிலில் விளக்கியிருக்கிறார். முன்னாள் போராளிகளும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களும் கண்காணிக்கப்பட்டு அச்சுறுத்தப்படுகின்றனர். எனவே பிரித்தானிய நாடாளுமன்றம் இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களைக் கருத்தில் கொண்டுள்ளது எனவும் அமைச்சர் லியோ டொச்செரி கூறினார். புலம்பெயர் அமைப்புகளின் கோரிக்கையினால் பிரித்தானிய அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயற்குழு 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதமும் இவ்வாறான விவாதம் ஒன்றை நடத்தியிருந்தது. இலங்கை அரசாங்கத்தின் மீது கண்டனமும் வெளியிடப்பட்டிருந்தது. ஆனால் அந்த விவாதத்திலும் பிரித்தானிய அரசாங்கத்தின் நிலைப்பாடு இலங்கை மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பது மற்றும் நல்லிணக்கம் என்ற கருத்துகளை மாத்திரமே அடிப்படையாகக் கொண்டிருந்தது.

இறுதிப் போர் நடைபெற்ற 2009 இல் இலங்கையின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த மைத்திரிபால சிறிசேன 2015 ஜனவரியில் ஜனாதிபதியாகப் பதவியேற்ற போது ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவியேற்றிருந்தார். "நல்லாட்சி அரசாங்கம்" எனப் பெயர் சூட்டப்பட்டு பிரித்தானிய, அமெரிக்க மற்றும் இந்திய அரசுகளின் ஆதரவுடன் மைத்திரி - ரணில் அரசாங்கம் பதவி வகித்திருந்தாலும் ஈழத்தமிழர் விவகாரத்தில் எதுவும் நடக்கவில்லை.

நல்லிணக்கமாகக் காண்பிப்பது, மத நல்லிணக்கமாகக் கூறுவது போன்ற கருத்துப் பரிமாற்றங்கள் அதிகளவில் தென்பட்டன. 2019 இல் இலங்கைத்தீவில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்கு ஒப்பான விசாரணைகளையே முப்பது வருடப் போரின் போதும் அதற்கு முந்திய தமிழர் படுகொலை பற்றியும் மேற்கொள்ளப்படும் விசாரணைகளிலும் பிரயோகிக்க வேண்டும் என்ற கருத்து பிரித்தானிய அரசாங்கத்தரப்பில் இருந்து வெளிப்பட்டது. ஒரு முழுமையான இன அழிப்பு மற்றும் சர்வதேச நீதிமன்ற விசாரணைக்குரிய பரிந்துரைகள் எதுவும் இல்லை. விவாதத்தில் உரையாற்றிய உறுப்பினர்களின் கருத்தின் பிரகாரம், தத்தமது தேர்தல் தொகுதிகளில் வாழும் புலம்பெயர் தமிழர்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர் என்பதுவும், இலங்கை அரசின் மீது சர்வதேசத்தினால் எந்த ஒரு நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்பதும் அவர்களின் ஆதங்கமாக இருப்பதை, அந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொனி தெளிவாக வெளிப்படுத்தியது. ஆகவே ஈழத்தமிழர்களின் அழுத்தங்களினால் இந்த விவாதம் நடைபெற்றிருக்கின்றது என்று பகிரங்கமாகக் கூற முடியும். ஆனால் இன அழிப்பு தொடர்பான சர்வதேச விசாரணையை உடனடியாக ஆரம்பிக்க

## இன மத நல்லிணக்கமாகவும் மனித உரிமைப் பாதுகாப்பு விவகாரமாகவும் சுருக்கமடைந்து வரும் இனப்பிரச்சினை விவகாரம்

குறிப்பாக 2015 இல் நிலைமாறுகால நீதி என சர்வதேசத்தினால் உத்தரவாதமளிக்கப்பட்டபோதும், ஈழத்தமிழர் விவகாரத்துக்கு அது பொருத்தமானதாக அமையவேயில்லை. தோல்வியடைந்தது. ஏனெனில் தென்னாபிரிக்காவில் அரசியல் விடுதலைப் போராட்டம் நடத்திய கறுப்பின மக்களிடம் முழு அதிகாரங்களும் வழங்கப்பட்ட நிலையிலேதான் அங்கு நிலைமாறு கால நீதி சாத்தியமானது. ஆனால் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த மைத்திரிபால சிறிசேனவை 2015 இல் ஜனாதிபதியாக்கிவிட்டு தமிழர் விவகாரத்தில் நிலைமாறுகால நீதி என மார் தட்டியமை மிகப் பெரும் சர்வதேச அரசியல் தவறு.

இது தொடர்பாக தொழிற் கட்சி உறுப்பினர் ஒருவர் கேள்வி எழுப்பியபோது அமைச்சர் லியோ டொச்செரி அதற்குப் பதிலளிக்க மறுத்துவிட்டார். ஈழத்தமிழர்கள் தொடர்பாக மார்ட்டின் டே முன்வைத்த கோரிக்கைகளுக்குப் பொறுப்பான பதிலை அமைச்சர் வழங்கவுமில்லை. கிழக்கு மாகாணப் பிரச்சினைகள் பற்றி எதுவுமே பேசப்படவில்லை. இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணப் பிரச்சினைகளைப் பற்றிய கலந்துரையாடல் என்று விவாதத்தில் கூறப்பட்டிருந்தாலும் வடக்கு மாகாண பிரச்சினைகள் பற்றியே அமைச்சர் லியோ டொச்செரி தனது பதிலில் அதிக கவனம் செலுத்தியிருந்தார்.

மட்டக்களப்பு மேய்ச்சல்தரையில் சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெற்று அங்கு கால்நடைகள் அழிக்கப்பட்டு வருகின்றமை தொடர்பாகப் பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூட இந்தப் பிரச்சினை மிகச் சமீபகாலத்தில் உருவானது என்ற தவறான கருத்தை வெளிப்படுத்தியிருந்தனர். மட்டக்களப்பில் மேய்ச்சல் தரையில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்ளும் விவகாரம் 2009 க்கு முற்பட்ட காலத்தில் இருந்தே உருவாகியுள்ளது. உன்னிச்சை மேய்ச்சல்தரை நிலங்கள் அபகரிக்கப்பட்டுச் சிங்கள விவசாயிகள் குடியேற்றம் செய்யும் ஏற்பாடுகள் அன்று இடம்பெற்றிருந்தன. மேய்ச்சல்தரை விவகாரம் போன்று கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் பௌத்த மயமாக்கல் தொடர்பாக இந்த விவாதத்தில் கவனம் செலுத்தப்படவில்லை. தமிழர் விவகாரத்தில் சிங்கள ஆட்சியாளர்களின் கூட்டுப் பொறுப்பு என்ன என்பது பற்றிப் பேசப்படவுமில்லை. ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டால் அதனை

வேண்டும் என்ற அழுத்தமும் அதற்கான விபரங்களும் உரிய முறையில் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் புலம்பெயர் அமைப்புகளினால் கையளிக்கப்படவில்லை என்பது புரிகிறது. குறிப்பாக 1958 இல் இருந்து கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு என்பதற்குரிய ஆவணங்கள் கையளிக்கப்படவில்லை. இதன் காரணமாகவே சர்வதேசம் வழமையாக மார்தட்டுகின்ற "இன நல்லிணக்கம்" "நிலைமாறு கால நீதி" மற்றும் "மத நல்லிணக்கம்" பற்றிய பேச்சுகளுக்குப் பிரித்தானிய அரசாங்கம் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறது எனலாம்.

தமிழர் குறித்த அமெரிக்க - இந்திய அரசுகளின் நோக்கங்களுக்கு மாறாக பிரித்தானிய அரசும் இயங்குவதற்குரிய வாய்ப்புகள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் புலம்பெயர் அமைப்புகள் உரிய முறையில் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு என்பதற்கு ஆவணங்களைத் தயார்ப்படுத்தி வழங்கியிருந்தால் சுயநிர்ணய உரிமைக்கான அங்கீகாரம் என்பது இயல்பாகவே பேசப்படவேண்டிய சூழல் உருவாகியிருக்கும். ஆனால் அதற்குரிய வேலைத்திட்டங்களை, தாயகத்தில் உள்ள தமிழ்த்தேசியக் கட்சிகள் சிவில் சமூக அமைப்புகள் மற்றும் புலம்பெயர் அமைப்புகள் ஒருமித்த குரலில் முன்னெடுக்கத் தவறியுள்ளன. அவ்வாறு செயற்பட்டிருந்தால் பிரித்தானிய நாடாளுமன்ற விவாதத்தில் பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சரியான நியாயப்படுத்தல்களை முன்வைத்திருப்பர். பிரித்தானிய அரசாங்கமும் அதற்குரிய பதிலை வழங்கியிருக்க வேண்டிய கட்டாயச் சூழல் ஏற்பட்டிருக்கும். சமாதானப் பேச்சு ஆரம்பிக்கப்படவிருந்த 2001 இல்தான் பிரித்தானியா விடுதலைப் புலிகள் மீது தடை விதித்திருந்தது. ஆனால் இதுவரையும் போர்க்குற்றத்தில் ஈடுபட்ட இலங்கை இராணுவத் தளபதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட சிங்கள அரசியல் தலைவர்கள் பலருக்கும் பிரித்தானிய அரசாங்கம் தடை விதிக்கவேயில்லை. இந்த நிலையில் சில புலம்பெயர் அமைப்புகளின் அழுத்தம் காரணமாக பிரித்தானிய நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதம் பெரும் தாக்கத்தைச் செலுத்துமெனக் கூறமுடியாது. இதற்காகப் புலம்பெயர் அமைப்புகள் இன்னமும் கடுமையாக உழைக்க வேண்டிய தேவையுமுள்ளது. தனித்தனியாகப் பிரிந்தல்ல. ஒருமித்த குரலில் ஒரு அணியாக நின்று செயற்பட்டால் இது இலகுவாகச் சாத்தியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புராதனகால யாழ்ப்பாணத்தில் பௌத்தமும் தமிழும்

3

சி. பத்மநாதன்
*தகைசார் பேராசிரியர்*
*பேராதனைப் பல்கலைக்கழகம்*
*வேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

இலங்கைத் தமிழர் வாழும் பகுதிகளில் பௌத்த சமயம் தொடர்பான புராதனமான வரலாற்றுச் சின்னங்கள் காணப்படுகின்றன. வன்னியில் அவை மிகக் கூடுதலான அளவிற் கிடைக்கின்றன. நாகரின் வழிபாட்டுச் சின்னங்களான நாக சிற்பங்களும் மிகவும் புராதனமான லிங்க உருவங்களும் அங்கு அதிகமாக உள்ளன. யாழ்ப்பாணத்திலே கந்தரோடையிற் பௌத்த கட்டடங்கள், சிற்பங்கள் என்பவற்றின் அடையாளங்கள் மிகுந்து காணப்படுகின்றன. திருகோணமலை மாவட்டத்திலுள்ள வெல்கம் விகாரை, ஸேருவல விகாரை என்பன மிகவும் புராதனமானவை. அதேபோல மட்டக்களப்பு மாவட்டத்திலே தாந்தாமலையில் மிகப் புராதனமான பௌத்தப்பள்ளி ஒன்றின் அழிபாடுகள் பரந்து காணப்படுகின்றன. அவற்றை கலாநிதி குணபாலசிங்கம், நாவற்குடா இந்து கலாசார நிலையத்தின் பொறுப்பதிகாரியாகப் பணிபுரிந்த எழில்வாணி பத்மகுமார் போன்றோர் அடையாளங் கண்டுள்ளனர்.



நாகரின் கந்தரோடைக்குளம்



வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள பௌத்த சமயச் சின்னங்களைப் பற்றிப் பிரித்தானிய நிர்வாக அதிகாரிகளான ஹியூ நெவில் ஹென்றி பார்க்கர், எச்.சி.பி.வெல் (Hugh Neville, Henry Parker, H.C.P.Bell)) முதலியோரால் சரியாக எதனையும் புரிந்துகொள்ள முடியவில்லை. இலங்கையிலுள்ள வரலாற்றாசிரியர்களாலும் புரிந்துகொள்ளமுடியவில்லை. அவற்றிலுள்ள எழுத்துகளையும் சொற்களையும் அடையாளங் காணமுடியாதமையே அதற்குரிய காரணமாகலாம்.

இலங்கைத் தமிழர் கி.மு.மூன்றாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலம் முதலாக வாழ்ந்துவரும் பகுதிகளிற் காணப்படும் பௌத்தம் தொடர்பான சின்னங்கள் ஆதிவரலாற்றுக் காலத்தில் நாகர் அமைத்த பௌத்தம் தொடர்பான கட்டுமானங்களின் அடையாளங்களாகும். அவற்றிலே பதிக்கப்பட்டுள்ள சொற்கள், பெயர்கள் என்பவை தமிழ்மொழியில் அமைந்தவை. மணிணாகன், மணிணாகன் பள்ளி என்ற பெயர்களும் நாகரின் ஈமக்கல்லறைகள் முதலானவற்றில் எழுதப்பட்ட இரு தமிழ் வசனங்களும் அவற்றிலே பரந்து காணப்படுகின்றன. பிராகிருத மொழிச் சொற்களை அவற்றிலே காணமுடியவில்லை. தமிழ்ப் பிராமி வடிவங்களில் அமைந்த தமிழ்ச் சொற்கள் பதிக்கப்பட்ட பௌத்த சின்னங்களும் பல நூற்றுக்கணக்கானவை. யாழ்ப்பாணத்திலே கிடைத்துள்ள ஆவணங்களில் வல்லிபுரம் பொன்னேடு மட்டுமே புறநடையானது. அது பிராகிருத மொழியில் அமைந்தது. ஆயினும், அதில் நாகதீவு என்னும் நாட்டுப் பெயரும் சிவிராயன் என்னும் குறுநிலவேளின் பெயரும் பிராகிருத மயமான கோலத்தில் எழுதப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணக் குடாநாட்டை நாகதீப என்று மகாவம்சம் முதலான பாளி நூல்கள் குறிப்பிடுகின்றன. அதனை நாகநாடு என்று மணிமேகலையிற் குறிப்பிட்டுள்ளனர். நாகர் செறிந்து வாழ்ந்தமையின் காரணமாக அப்பெயர் உருவாகியுள்ளது. மட்டக்களப்பு பூர்வசரித்திரம் நாகதீவு என்னும் பெயரால் யாழ்ப்பாணத்தைக் குறிப்பிடுகின்றது. நாகதீபத்தில் ஆதிக்கம் பெற்றிருந்த நாக அரசர்களைப் பற்றிய கதை மகாவம்சத்திற் சொல்லப்படுகின்றது. நாகதீவின் அருகிலே கடலில் அமைந்துள்ள தீவொன்றில் காணப்பட்டதும் அதிசயங்களின் நிலைக்களம் ஆகியதுமான பௌத்த பீடமொன்றை கைவசப்படுத்தும் நோக்கத்துடன் மகோதரன், சூளோதரன் என்னும் மாமனும் மருமகனுமாகிய நாகமன்னர் போர் புரிவதற்கு பெரும் படைகளை அணிசேர்த்தனர் என்பது மகாவம்சக்கதை. போரினாற் பெருங்கேடு நிகழும் என்பதை உணர்ந்த புத்தர்பிரான், அதனைத் தடுக்கும் வண்ணமாக வான்வழியாக வந்து, அந்தப் பீடம் தனக்குரியதென்று சொல்லி அதில் இருந்துகொண்டு நாக மன்னருக்கு உபதேசம் செய்தார் என்று சொல்லப்படுகின்றது. அவரது போதனையைக் கேட்டதும் நாகர் அமைதியாகி ஆயுதங்களைக் கைவிட்டனர் என்றும் சொல்லப்படுகின்றது. தீவுபற்றில் அடங்கிய தீவொன்றில் பிரசித்திபெற்ற பௌத்த சமய வழிபாட்டுத் தலமொன்று மகாவம்சம் எழுதப்பெற்ற காலத்தில் நிலைபெற்றிருந்தமைக்கு இந்தக் கதை ஓர் அடையாளமாகும். அத்தலம் அடங்கியுள்ள தீவினை மணிபல்லவம் என்று மணிமேகலை குறிப்பிடுகின்றது.

அதிசயங்கள் நிகழும் புத்தர் பீடம் பற்றிய மகாவம்சக் கதையை மணிமேகலையில் விசாலமான கோலத்தில் விளக்கி மேல்வருமாறு பதிவு செய்துள்ளனர்:

> *விரிந்திலங்கு அவிரொளி சிறந்து, கதிர் பரப்பி,*
> *உரைபெறு மும்முழம் நிலமிசை ஓங்கித்*
> *திசைதொறும் ஒன்பான் முழநிலம் அகன்று,*
> *விதிமாண் ஆடியின் வட்டம் குயின்று,*
> *பதுமசதுர மீமிசை விளங்கி,*
> *'அறவோற்கு அமைந்த ஆசனம்' என்றே,*
> *நறுமலர் அல்லது பிறமரம் சொரியாது,*
> *பறவையும் முதிர்சிறை பாங்குசென்று அதிராது,*
> *தேவர்கோன் இட்ட மாமணிப் பீடிகை,*
> *பிறப்பு விளங்கு அவிரொளி அறத்தகை யாசனம்,*
> *கீழ்நில மருங்கின் நாகநாடாளும்*
> *இருவர் மன்னவர் ஒருவழித் தோன்றி*
> *எமதீ தென்றே எடுக்கல் ஆற்றோர்*
> *தம்பெரும் பற்று நீங்கலும் நீங்கார்*
> *செங்கண் சிவந்து நெஞ்சுபுகை உயிர்த்து*
> *தம்பெரும் சேனையொடு, வெஞ்சமர் புரிநாள்,*
>
> *'இருஞ்செரு ஒழிமின் எமதீது' என்றே*
> *பெருந்தவ முனிவன் இருந்தறம் உரைக்கும்*
> *பொருவறு சிறப்பிற் புரையோர் ஏத்தும்*
> *தரும பீடிகை தோன்றியது ஆங்கென்.*

அதிசயக் குணங்களையுடைய தர்மாசனம் காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து "ஆறைந்து யோசனை தென்திசை மருங்கில் திரையுடுத்த மணிபல்லவத்திடை" உண்டென்பது மணிமேகலையில் வரும் குறிப்பாகும்.

மணிபல்லவம் என்பது கடல் சூழ்ந்த ஒரு தீவு அது புகாரின் தென்திசையில் முப்பது யோசனை தூரத்தில் இருந்தது. அதனைச் சென்ற நூற்றாண்டில் நயினாதீவு என்று அடையாளங் கண்டுள்ளனர். ஆயினும் அங்கு புராதனமான பௌத்த சமய சின்னங்கள் எவையும் கிடைக்கவில்லை. எனவே, மணிபல்லவத்தை நயினாதீவு என அடையாளங் கண்டுள்ளமை எத்துணைப் பொருத்தமானது என்பது ஆய்வுக்குரியதாகும். மணிபல்லவம் காவிரிப்பூம் பட்டினத்துக்கும் நாகநாட்டிற்கும் இடைப்பட்ட கடல்வழிப் பாதையின் நடுவண் அமைந்த தீவு என்று சொல்லப்படுகின்றது.

மணிபல்லவத்தில் அமைந்த தர்மாசனம் கடலோரமாகவும் நாவாய்களின் தரிப்பிடமொன்றின் அண்மையிலும் இருந்தது என்பதும் கம்பளச் செட்டியின் கதைமூலம் உணரப்படும். அத்தீவிலே தரித்துநின்று செல்லும் நாவாய்கள் கடற் பாறைகளில் மோதி உடைவதைப் பற்றியும் அக்கதை மூலம் அறியமுடிகின்றது. மணிபல்லவம் பற்றி மணிமேகலையிற் சொல்லப்படும் விபரங்கள் நயினாதீவுக்கன்றி நெடுந்தீவுக்கே பொருத்தமானவை.

நெடுந்தீவிலே கடலோரமாகவுள்ள வெடியரசன் கோட்டையில் ஆதிவரலாற்றுக் காலத்துப் பௌத்தப் பள்ளிகளின் அடையாளங்கள் உள்ளமை கவனித்தற்குரியது. அந்தப் பள்ளிகளும் காலத்தால் மணிமேகலைக்கு முற்பட்டவை. அவை நாக அரசர்களின் திருப்பணிகளாகும். அங்கு சேதியங்கள் சிலவற்றின் அடித்தளங்கள் சீர்குலையாத நிலையிற் காணப்படுகின்றன. அங்குள்ள. தமிழ்ப் பிராமி வடிவங்களில் எழுதிய கல்வெட்டுகள் அவற்றுக்கும் நாகருக்கும் இடையிலான தொடர்புகளின் அடையாளங்களாகும்.

தொல்லியல் ஆய்வுகளில் உலகப் பிரசித்தி பெற்றவரான றொவின் கொனிங்காம் (Robin Coningham) வெளியிட்ட புகைப்படமொன்றில் வேள்ணாகன் என்னும் தொடர் வெடியரசன் கோட்டையிலுள்ள சேதியமொன்றின் தளத்திலே தெளிவாகத் தெரிகின்றது.

அங்குள்ள சேதியமொன்றின் அருகிலே காணப்பட்ட பரந்த கற்பீடமொன்றிற் பிற்காலத்தில் எழுதிய தமிழ்க் கல்வெட்டுகள் தெரிகின்றன. அவற்றைத் தொல்பொருள் திணைக்களத்தினர் ஏறக்குறைய 20 வருடங்களுக்குமுன் படியெடுத்துள்ளனர்.

எம்மால் அந்தப் படிகளை ஆராய்ந்துகொள்ள முடிந்தது. அவற்றிலே காணப்படும் தமிழ்க் கல்வெட்டுகள் வரலாற்று ஆவணங்கள் என்ற வகையில் எதுவிதமான சிறப்பும் இல்லாதவை.

ஆயினும், தமிழ்க் கல்வெட்டுகளை மிகவும் பிற்காலத்திலே தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகளின் மேல் வெட்டியுள்ளனர். முன்பு இங்கு குறிப்பிட்டவாறு, கட்டுமானங்களில் வழமையாக நாகர் பதிவுசெய்யும் இரு தமிழ் வசனங்களையும் வெடியரசன் கோட்டையிலுள்ள சேதியத்தின் முன்பாகவுள்ள விசாலமான பாறைக் கல்லில் வெட்டியுள்ளனர். அந்தக் கல்லில் நாகபந்த வடிவங்கள் பலவும் செதுக்கப்பட்டுள்ளன. அதனால் அங்குள்ள சேதியங்கள் தமிழ்மொழி பேசிய நாகரால் உருவாக்கப்பட்டவை என்பது தெளிவாகத் தெரிகின்றது. வெடியரசன் கோட்டையிற் பெருங்கற் பண்பாட்டுச் சின்னங்களான உலோகப் பொருட்கள், மட்கலவோடுகள் என்பன கிடைத்துள்ளமையும் கவனித்தற்குரியது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சீதாக்கா: அப்போது போராளி இப்போது அமைச்சர்!

○ அகிலினி



"துப்பாக்கி ஏந்தியிருந்தாலும் சரி, துப்பாக்கி ஏந்தியவர்களுடன் இருந்தாலும் சரி, அது பலவீனமானவர்களுக்காக, அவர்களின் சமூகத்துக் காக, அவர்களின் வாழ்விடத்துக்காக, அவர்கள் உடுத்தும் உடைக்காக..." தான் துப்பாக்கி ஏந்தி நிற்கும் புகைப்படத்தை முகநூலில் பகிர்ந்து, இந்த வார்த்தைகளைக் கூறியிருப்பவர், தற்போது இந்தியாவின் தெலுங்கானாவில் அமைச்சர் பொறுப்பை ஏற்றுள்ள சீதாக்கா.

சீதாக்கா என்ற பெயர், தெலுங்கு பேசும் இரண்டு மாநிலங்களிலும் நன்கு அறியப்பட்ட ஒன்று.

சீதாக்காவின் இயற்பெயர் தனசாரி அனசுயா. அவர் வயது 52. உஸ்மானியா பல்கலைக்கழகத்தில் அரசியல் அறிவியலில் முனைவர் பட்டம் பெற்றவர்.

இவரது பெற்றோர் சம்மையா மற்றும் சம்மக்கா. சீதாக்காவுக்கு ஒரு மகன் இருந்தார். அவர் பெயர் சூர்யா. பழங்குடி இனத்தைச் சேர்ந்த சீதாக்கா, தன் கண்முனே தன் இனம் அடக்கி ஒடுக்கப்படுவதைப் பொறுக்கமுடியாமல் வெகுண்டெழுந்தார். மாவோயிஸ்ட், நக்ஸலைட் அமைப்புகள் ஆயுதம் தாங்கிய போராளிகளாக அவர் செயற்பட்டார். 1997 ஆம் ஆண்டு அரசாங்கம் வழங்கிய பொது மன்னிப்பின்போது, தனது ஆயுத வாழ்வுக்கு விடை கொடுத்த சீதாக்கா, 3 மாத சிறைவாசத்தின் பின்னர் மீண்டும் மக்கள் பணிக்குத் திரும்பினார். இப்போது அவர் நம்பியது துப்பாக்கியை அல்ல, அகிம்சையை. ஜனசக்திக்குழுவில் இணைந்து மக்களுக்கான முழுநேர சேவையாளராக மாறினார்.

### அரசியல் பிரவேசம்

சீதாக்கா தெலுங்கு தேசம் கட்சி சார்பில் 2004ஆம் ஆண்டு முளுகு தொகுதியில் போட்டியிட்டார். ஆனால் காங்கிரஸ் வேட்பாளர் போடம் வீரய்யாவிடம் தோல்வியடைந்தார். பின்னர் 2009இல் அதே வீரய்யாவை எதிர்த்து வெற்றி பெற்றுச் சட்டசபையில் நுழைந்தார். 2014 தேர்தலில் தெலுங்கு தேசம் கட்சி சார்பில் போட்டியிட்டார். ஆனால் அவர் டி.ஆர்.எஸ். வேட்பாளர் சந்துலாலிடம் தோல்வியடைந்தார். கடந்த 2018 ஆம் ஆண்டில் சீதாக்கா காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார். முளுகு தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றிபெற்றார்.

சீதாக்காவின் நேர்மையும், சாமானியர்களோடு சாமானியராக இருக்கும் இயல்பும் அவருக்குத் தனிச்சிறப்பைப் பெற்றுத் தந்தன, என்கின்றனர் அரசியல் நோக்கர்கள். கொரோனா காலத்தில்சீதாக்கா தொலைதூரக் கிராமங்களுக்குச் சென்று உணவுப் பொருள்களை வழங்கி செய்திகளில் பிரதான இடம்பிடித்தார்.

மக்கள் படும் இன்னல்களைக் கண்டுசீதாக்கா பதைபதைத்துப்போனார். இந்த ஆண்டு ஜுலை மாதம் தெலங்கானாவில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, முளுகு மாவட்டம், ஏதூர்நகரம் மண்டலத்தில் உள்ள கொண்டை என்ற கிராமம் முழுவதும் வெள்ளம் சூழ்ந்தது. அங்கு மக்கள் படும் இன்னல்களைக் கண்டு சீதாக்கா மனம் வெதும்பினார். இந்தக் கிராம மக்களைக் காப்பாற்ற ஹெலிகொப்டர் அனுப்புமாறு அவர் கண்ணீர்மல்க வேண்டுகோள் விடுத்தது சமூக ஊடகங்களில் வைரலாகப் பரவியது. சட்டமன்றத்தில், முளுகு மாவட்டத்தின் பிரச்சினைகளைப் பேசி வந்தார்.

தற்போது அவர் தெலுங்கான மாநில அமைச்சராக உயர்ந்துள்ளார். அவர் பதவியேற்க வந்தபோது மேடையில் காங்கிரஸ் கட்சியின் சோனியா காந்தி, ராகுல் காந்தி உள்ளிட்ட காங்கிரஸ் கட்சியின் பெருந்தலைவர்கள் இருந்தனர். அவர்கள் பேசியபோது கூட அமைதியாக இருந்த மக்கள் கூட்டம், சீதாக்கா பதவியேற்க வந்தபோது பெரிதாக ஆர்ப்பரிக்க, அந்த அன்பில் சீதாக்க நெகிழ்ந்து போனார். மக்களின் ஆரவாரம் அடங்க 5 நிமிடங்களானது. அதன் பின்னரே அவர் பதவியேற்றார். இதே மக்கள் ஆதரவு இருந்தால் சீதாக்கா அடுத்தமுறை தெலுங்கானாவின் முதலமைச்சராகவும் மாறக்கூடும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## உலகக்கிண்ண கொண்டாட்டத்தின் வெற்றியாளருக்கான பரிசளிப்பு!

உதயனின் உலகக்கிண்ணக் கொண்டாட்டத்தில் 'மெகா' பரிசில்களை வென்றோருக்கான பரிசளிப்பு வைபவம் உதயன் அலுவலகத்தில் **எதிர்வரும் 16ஆம் திகதி நண்பகல் 12.30 மணிக்கு** இடம்பெறவுள்ளது.

**மெகா பரிசு வெற்றியாளர் விவரம்**

| | |
|---|---|
| 1 | **100,000/=**<br>**தே.விதுஷினி**<br>வலித்தூண்டல், கீரிமலை |
| 2 | **50,000/=**<br>**எஸ்.கபில்தேவ்**<br>அடம்பன், மன்னார் |
| 3 | **25,000/=**<br>**கி.கிரிஷாந்**<br>இல.137/3, உக்கிளாங்குளம், வவுனியா |

**ஆறுதல் பரிசுபெறுவோர் (தலா 2500/=)**

| | |
|---|---|
| **வ.விக்னேஸ்**<br>அராலி தெற்கு, வட்டுக்கோட்டை | **ச.பிரசாந்**<br>அண்ணாசிலையடி, கரணவாய், கரவெட்டி |
| **ஆர்.எல்.அபயதீரா**<br>வேப்பங்குளம், வவுனியா | **கி.கிங்ஸ்டன் ஜெரி**<br>ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம் |
| **ம.பிரசாந்தன்**<br>இல.21, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் | **அ.பவுல் தனுர்சன்**<br>இ.ளவாலை, யாழ்ப்பாணம் |
| **த.சுதாகர்**<br>கொடிகாமம், | **அ.சிந்துஜன்,**<br>கள்ளப்பாடு, முல்லைத்தீவு |
| **சி.சிவண்ணன்**<br>நவாலி, மானிப்பாய் | **எல்.ரகுப்பிரியன்**<br>புத்தூர், ஆவரங்கால் |
| **இ.ஸ்கந்தராசா**<br>மடம்வீதி, திருநெல்வேலி வடக்கு | **ஆர்.ஆன்றியோ**<br>நானாட்டான், மன்னார் |


**வெற்றியீட்டியோர் பரிசளிப்புவிழாவுக்கான தங்கள் வரவை 076 737 4444 என்றும் திறன்பேசி இலக்கத்துக்குத் தொடர்ப கொண்டு உறுதிப்படுத்தவும்**

'தினம் ஒரு பரிசு' திட்டத்தில் வெற்றியீட்டியோர் 17.12.2023 - 24.12.2023 வரையிலான காலப்பகுதியில் 076 737 4444 என்னும் திறன் பேசி இலக்கத்துக்குத் தொடர்புகொண்டு உறுதிப்படுத்தி தமது பரிசில்களை உதயன் தலைமைப்பணிமனை மற்றும் நெல்லியடி, சாவகச்சேரி, கிளிநொச்சி, வவுனியா ஆகிய இடங்களில் உள்ள கிளைக்காரியாலயங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.







றெ.செரே
தரம் - 03F.
யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்



து. மகிழுரி,
முன்பள்ளி
ஞானசம்பந்தர் கலாமன்றம்,
பருத்தித்துறை.

பா. ஏஞ்சல்.
தரம் - 7,
யாழ்ப்பாணம்.





சி.பிரவின் ,
தரம் - 11 ,
சாவகச்சேரி
இந்துக் கல்லூரி.



அபிநாஷ், அபிராமி
தரம் - 4
யா/ உடுவில் மகளிர் கல்லூரி.




கீ.ஷக்ஷனா ,
தரம் - 1,
நீர்வேலி கரந்தன்
இராமுப்பிள்ளை வித்தி.



என்.ஆர்த்திகன் ,
தரம் - 5,
யா/ உடுவில் மகளிர் கல்லூரி

T.டிலக்சன் ,
தரம்
- 3B ,
யாழ்ப்பாணக் கல்லூரி





**மாணவர்களே!**

நீங்களும்
உங்கள் கைவண்ணங்கள்,
ஆக்கங்களை அனுப்பலாம்

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555




# பாலைவன நாடு!

- உலகின் பத்தாவது பெரிய நாடாகவும் ஆபிரிக்காவின் மிகப்பெரிய நாடாகவும் இருப்பது அல்ஜீரியா.
- கி.மு. 10,000 ஆண்டுகளுக்கு முன்பே இங்கே மனிதர்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.
- ஏழாம் நூற்றாண்டின் மத்தியில் அரேபியர்கள் இங்கே குடியேறியுள்ளனர். அல்ஜஸாரி என்ற அரேபியச் சொல்லிலிருந்து இந்தப் பெயர் வந்தது.
- 1830ஆம் ஆண்டிலிருந்து காலனி ஆதிக்கத்திலிருந்து, 1962ஆம் ஆண்டில் சுதந்திரம் அடைந்தது.
- கி.பி 1170 – 1250 காலகட்டத்தில் வாழ்ந்த புகழ்பெற்ற இத்தாலியக் கணிதவியலாளரான, ஃபிபொனாச்சி (Fibonacci), இளமைப் பருவத்தில் இங்குதான் தங்கியுள்ளார்.
- இந்துஅராபிய எண் முறையையும் இங்குதான் கற்றுள்ளார். உலகின் புகழ்பெற்ற சகாரா பாலைவனத்தின் வட கிழக்கு எல்லை அல்ஜீரியாவில்தான் அமைந்துள்ளது.
- நடுப் பாலைவனப் பகுதி என்பதால், ஆண்டு முழுவதும் வெப்பம் மிகுந்திருக்கும். இரவிலோ கடுமையான குளிர் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவை இரத்தினதுரை




## முன்றில் 23

○ இயல்வாணன்

**'கேட்க ஒரு நாதி**
**கிளர்ந்தெழும்ப ஒரு கூட்டம்**
**மீட்க ஒரு இயக்கம்**
**மூச்சுவிட ஒரு கவிஞன்**
**கட்டாயம் தேவை இது**
**காலத்தின் குரலாகும்'**

என்று பாடிய கவிஞர் புதுவை இரத்தினதுரை ஒரு காலத்தின் கவிஞராகவே தனது அடையாளத்தைப் பதித்தவர். சிற்பாசாரியாரான வரதலிங்கத்தின் இரண்டாவது மகனாக 1948 ஆம் ஆண்டு டிசெம்பர் 3 ஆந் திகதி புத்தூரில் பிறந்த இரத்தினதுரை தனது ஊரின் பெயரையும் இணைத்துக் கொண்டு புதுவை இரத்தினதுரையாக கவி வடிக்க ஆரம்பித்தார்.




இவர் தனது ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியை புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரியில் நிறைவு செய்தார். அதன் பின்னர் இவரது சிறிய தந்தையாரான ஸ்ரீகந்தசாமியுடன் இணைந்து அவரது ஸ்ரீவாணன் சிற்பாலயத்தில் தேர்த் தொழில் செய்வதற்கான நுட்பங்களையும், மரச்செதுக்கு சிற்பக்கலை நுட்பங்களையும் கற்றுத் தேறியதுடன் ஒரு சிற்பாசாரியராகவும் உருவானார். நயினாதீவு நாகபூஷணியம்மன் மஞ்சம், முன்னேஸ்வரம் ஆலயத்தேர், சட்டநாதர் சிவன் கோவில் தேர் உள்ளிட்ட பல ஆலயங்களின் தேர் உருவாக்கத்தில் இவரது கைவண்ணம் உள்ளது. நல்லூர் கம்பன் கோட்டத்தின் கதவு உள்ளிட்ட சிற்பச் செதுக்கல் கொண்ட கலைநயமான கதவுகள் பலவும் இவரால் உருவாக்கப்பட்டுள்ளன.

இவரது குருநாதரான கந்தசாமி மார்க்ஸியச் சிந்தனை கொண்ட ஒரு பொதுவுடைமைவாதியாக விளங்கினார். அவரது கருத்துநிலை புதுவை இரத்தினதுரையைப் பற்றிக் கொண்டது. கொம்யூனிசக் கட்சி ரஷ்ய சார்பு, சீன சார்பு என நிலையெடுத்திருந்த காலத்தில் இவர் சீன சார்பு நிலைப்பாட்டில் இருந்த பொதுவுடைமைவாதிகளுடன் இணைந்து தொண்டனாகச் செயற்பட்டார். பொதுவுடைமை மேடைகளில் இவர் உரையாற்றியதுடன் வீச்சுடன் கவிதைகளும் வடித்தார். சிங்கள இடதுசாரிகளுடனும் நெருங்கிப் பழகினார். 1970களின் இறுதியில் தமிழர்களுக்கு எதிரான விரும்பத்தகாத சம்பவங்களின் பாதிப்பு, அரசாங்கத்தில் இணைந்திருந்த இடதுசாரிகளின் மௌனம் என்பன புதுவை இரத்தினதுரையைப் பாதித்தன.

"இருமொழி ஒரு நாடென்று/ இதுவரைஇருந்த நீதி/ தெருவினில் கிடக்குதம்மா/ தேசியம் என்ற பிள்ளை/ கருவிலே சிதைந்த காட்சி/ கண்களிற் தெரியுதம்மா/ பெருத்ததோர் வகுப்புவாதப் / புயலடித் தோய்ந்த தம்மா"என்று இந்த நிலைமையினைப் பாடினார். கொம்யூனிச ஈடுபாட்டையும் குறைத்துக் கொண்டார். நாட்டை விட்டு வெளியேறி இரு ஆண்டுகள் (1979-80) சிங்கப்பூரில் கப்பல் நிறுவனத்தில் பணியாற்றிய இவர் நாடு திரும்பி, மீண்டும் பஹ்ரைன் நாட்டுக்குச் சென்று தளபாடத் தொழிலகத்தில் (1983-85) பணியாற்றினார். 1985 இல் நாடு திரும்பிய இவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டார். 2009 இல் முள்ளிவாய்க்காலில் படையினரிடம் சரணடைந்து காணாமற் போகும் வரை அந்த அமைப்பின் கலை கலாசாரப் பிரிவின்(பின்னர் கலை பண்பாட்டுக் கழகம்) பொறுப்பாளராகச் செயற்பட்டார்.

தனது 14 ஆவது வயதில் கவிதை எழுத ஆரம்பித்த புதுவை இரத்தினதுரை மார்க்சிய சிந்தனையை வரித்துக் கொண்டு ஒரு இடதுசாரியாக மக்கள் இலக்கியவாதியாக தன்னை அடையாளங் காட்டினார். வர்க்க ரீதியாகவும், சாதி ரீதியாகவும் அடக்கப்பட்ட மக்களுக்காக இவரது பேனா குரல் கொடுத்தது. மானுட விடுதலைக்கான பாடல்களாக இவரது கவிதைகள் உருக்கொண்டன. பின்னர் அது தமிழ்த் தேசிய விடுதலையின் பால் திரும்பியது. குமரன், தாயகம், மல்லிகை, வெளிச்சம், சுட்டும் விழி முதலான சஞ்சிகைகளிலும், சுதந்திரன், தினகரன், வீரகேசரி, சிந்தாமணி, ஈழநாடு, ஈழநாதம், உலகத்தமிழர், விடுதலைப்புலிகள், தேசாபிமானி முதலான பத்திரிகைகளிலும் இவரது கவிதைகள் வெளிவந்தன. கவிஞராகவே, அதிலும் மரபுக் கவிஞராகவே அடையாளப்படுத்தப்பட்டாலும் கட்டுரைகள் பலவற்றையும் இவர் எழுதியுள்ளார்.

இவரது முதலாவது கவிதைத் தொகுதியான வானம் சிவக்கிறது சுதாயினி வெளியீடாக 1970ஆம் ஆண்டு வெளிவந்தது. இதன் வெளியீட்டு விழா புத்தூரில் நடைபெற்றது. ஒரு தோழனின் காதல் கடிதங்கள்(1976 தாரகைகள் இலக்கியக்குழு வெளியீடு), இரத்த புஷ்பங்கள் (1980 கண்டி கலைஞர் பதிப்பகம்), நினைவழியா நாட்கள்(1993தமிழ்த்தாய் வெளியீடு), வியாசனின் உலைக்களம்(2003 தமிழ்த்தாய் வெளியீடு), பூவரம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும் (2005 நங்கூரம் வெளியீடு) ஆகிய கவிதை நூல்களும் வெளிவந்துள்ளன.

தனது தந்தையார் வரதலிங்கம், தாயார் பாக்கியம் ஆகியோரது பெயர்களை இணைத்துக் கொண்டு வரதபாக்கியான் என்ற புனைபெயரிலும் கவிதைகள் எழுதினார். அதுபோல தனது மனைவி ஸ்ரீரஞ்சினியின் பெயரை இணைத்து ரஞ்சினிரத்தினம் என்ற புனைபெயரிலும் இவர் கவிதைகளை எழுதியுள்ளார். தனது மகளான மாலிகாவின் பெயரிலும், வியாசன், கமலக்கன்னி, இளவரதன் ஆகிய பெயர்களிலும் இவரது கவிதைகள் வெளிவந்துள்ளன.

புதுவை இரத்தினதுரையின் சிறப்பே கவிதை வாசிப்புத்தான். கவியரங்க மேடைகள் பல கண்ட இவரது கவிதைகளைக் கேட்பதற்கென்றே ரசிகர் கூட்டமொன்றிருந்தது. சொற்சுவையோடு கவிதை சொல்லும்பாங்கே அலாதியானது. அதுபோலத்தான் இவரது மேடைப்பேச்சும். கொம்யூனிஸ்ட் கட்சி மேடைகளிலும், விடுதலைப் போராட்ட கால மேடைகளிலும் அனல் பறக்கும் பேச்சாளனாக இவர் தனித்துத் துலங்கியுள்ளார். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆஸ்தான கவிஞராக விளங்கிய இவர் பல நூறு தாயக விடுதலைப் பாடல்களை எழுதியுள்ளதுடன் அவ்வியக்கம் சார்ந்த பிரசாரக் கவிதைகள் பலவற்றையும் எழுதியுள்ளார். பெரியளவில் இரண்டு முத்தமிழ் விழாக்களை மானிப்பாயிலும், சாவகச்சேரியிலும் நடத்திய இவர் காத்திரமான முத்தமிழ் விழா மலர்களையும் (1991, 1992) வெளியிட்டார். கருணாகரனை ஆசிரியராகவும், புதுவை இரத்தினதுரையை நிர்வாக ஆசிரியராகவும் கொண்டு வெளியிடப்பட்ட வெளிச்சம் சஞ்சிகை அக்காலகட்டத்தின் காத்திரமான இலக்கிய ஏடாக(1991-2005) வெளிவந்தது. இலங்கையின் சிங்கள - தமிழ் - முஸ்லிம் படைப்பாளிகளை ஒன்றிணைத்து நான்கு நாள்கள் மானுடத்தின் தமிழ்க்கூடல் (2002 ஒக்ரோபர் 20,21,22,23) என்ற நிகழ்வை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடத்தியதில் இவரது தலைமைத்துவம் முக்கியமானது. தமிழ்நாட்டில் இருந்து கவிஞர் இன்குலாப், எழுத்தாளர் பா.செயப்பிரகாசம், ஓவியர் ட்ரொஸ்கி மருது, திரைப்பட இயக்குநர் புகழேந்தி தங்கராஜ், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் ஆகியோர் இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்டிருந்தனர். அதுபோல ஹிரு குழுவினரின் ஏற்பாட்டில் கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெற்ற சிங்கள தமிழ்க் கலைக்கூடலிலும் (2003 ஒக்ரோபர் 29,30) இவரது பங்களிப்பு முக்கியமானது. இங்குள்ள கலை இலக்கியகர்த்தாக்களை ஒருங்கிணைத்து அழைத்துச் சென்று வசதியளித்தல்களைச் செய்தமை குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வில் 'சிஹல உறுமய' என்ற பேரினவாத அமைப்பொன்று வன்முறைத் தாக்குதலை நடத்தி குழப்பங்களை ஏற்படுத்திய போதும் நிகழ்வு தொடர்ந்து நடைபெற்றமையும் பதிவு செய்யத்தக்கது. பிற்காலத்தில் ஆலயங்கள் மீதான பாடல்களையும் இவர் எழுதியுள்ளார். நல்லை முருகன் பாடல்கள், துயர் வெல்லுந் துணை முதலான இறுவட்டுகள் பிரபலமானவை. திருநெல்வேலி பத்திரகாளி அம்மன், லண்டன் ஈலிங் கனகதுர்க்கை அம்மன், சுவிற்சர்லாந்து சூரிச் சிவன் கோவில் முதலானவற்றுக்கும் இவர் பாடல்களை எழுதியுள்ளார். இவரது கவிதைகளைப் போலவே இவரும் ஒரு உணர்ச்சிக் கொந்தளிப்பான மனிதராகவே அடையாளப்படுத்தப்பட்டார். இவரது கவிதைகளும் பேச்சும் உணர்ச்சி கொப்பளிப்பனவாக வெளிவந்ததே இதற்குக் காரணம். ஆனால் இயல்பில் ஒரு குழந்தைத்தனமும் அன்பும் கொண்ட பழக இனிய மனிதராகவே இவர் வாழ்ந்திருந்தார். பேராசிரியர் கா.சிவத்தம்பி கூறுவது போல 'புதுவையின் கருத்துநிலைத் துணிபும் கவித்துவ ஆளுமையும் அவரை இன்றைய சராசரி மனிதனின் குரலாகவும், முக்கியமாக அவனுக்கான கவிதைக் குரலாகவும் வைத்திருப்பதைக் காணலாம்' என்பது முக்கியமானது. அது காலக் கவிஞராக அவரை நிலைநிறுத்தியது எனலாம்.

# ஊர்ப்புதினம் 16



○ இராகவன்

**பாகம் 2**

மோட்டார் சைக்கிள் நவரத்தினம் மாஸ்ரரை பற்றியும் கொஞ்சம் சொல்ல வேண்டியிருக்கு. அதைப் பிறகு சொல்லுறன். இப்ப விசயத்துக்கு வருவம். ஒருக்கால் எங்கட வகுப்புக்கு சைவசமய பாடநேரம். அப்ப எங்களுக்கு சைக்கிள்ள வாற நவரத்தினம் மாஸ்ரர்தான் சைவ சமயம் படிப்பிச்சவர். அண்டைக்கு அவர் வகுப்புக்கு வாறதுக்குக் கொஞ்சம் பிந்திப்போச்சு. பக்கத்து வகுப்புக்கு ஏயெம் ஜெபரத்தினம் மாஸ்ரர்தான் பாடம். அவர் நேரத்துக்கு வந்திட்டார். எங்கட வகுப்பில மாஸ்ரரில்லாமலிருக்கிறதைப் பாத்திட்டு "யாரடா சட்டாம் பிள்ளை?" எண்டு கேட்டார். மொனிற்றர் பொடியன் எழும்பி நிண்டான். "என்னடா பாடம்?" எண்டு கேட்டார். "றிலிஜன்" எண்டு அவன் சொன்னான். "யாரடா வாத்தி?" எண்டு கேட்டார். "நவரத்தினம் ஸேர்" எண்டான். பிறகு அவர் கேட்ட கேள்விதான் பெரிய பகிடியாப்போச்சு.

"மோட்டார் சைக்கிள் நவரட்ணமா, பீத்தல்சைக்கிள் நவரட்ணமா?" எண்டு கேட்டார். இரண்டு வகுப்பும் பக்கெண்டு சிரிச்சுது. "பீத்தல் சைக்கிள் நவரட்ணம்" எண்டு எங்கட வகுப்புப் பொடியள் பயந்தெளிஞ்சு கோரசாக் கத்தினாங்கள். திரும்பவும் இரண்டு வகுப்பும் சிரிச்சுது. அந்தச் சிரிப்படங்கிறதுக்கிடையில நவரத்தினம் மாஸ்ரர் வந்திட்டார். அவரைக் கண்டதும் ஏயெம் ஜெபரத்தினம் மாஸ்ரர் சொன்னார். "மாஸ்ரர் உங்கட வகுப்புப் பொடியள யாரடா பாடம் எண்டு கேட்டன். பீத்தல் சைக்கிள் நவரத்தினம் எண்டு சொல்லுறாங்கள்". இதைக் கேட்டாப்போல போதாக்குறைக்கு நவரத்தினம் மாஸ்ரரும் விழுந்து விழுந்து சிரிச்சார். அண்டைக்கு ஒரே கலகலப்பாப் பொழுது கழிஞ்சுது.

ஏற்கனவே இந்த நவரத்தினம் மாஸ்ரரைப் பற்றிக் கொஞ்சம் மேலோட்டமாச் சொல்லியிருக்கிறன். இனிக் கொஞ்சம் விரிவாச் சொல்லுறன். நீங்கள் ஏ.கே.கருணாகரன் எண்டொரு சங்கீத வித்துவானைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பியள். இவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின்ர ஆஸ்தான பாடகராயிருந்தவர். அடிக்கடி றேடியோவில கச்சேரி வைக்கிறவர். இவரைப் பற்றியும் எங்கடையப்பா எனக்கு "எங்களோட நெல்லியடி சென்றல் ஸ்கூல்ல கருணாகரன் எண்டொரு பொடியன் படிச்சவன். நல்ல சங்கீத ஞானமுள்ளவன். றேடியோ சிலோனிலயும் கச்சேரி செய்யிறவன்" எண்டு சொல்லியிருக்கிறார். இந்த ஏ.கே.கருணாகரனும் கிட்டடியில காலமானதை பேப்பர்களில பாத்திருப்பியள். இந்த ஏ.கே.கருணாகரனும் எங்கடை நவரத்தினம் மாஸ்ரரும் ஒண்டவிட்ட சகோதரங்கள். நவரத்தினம் மாஸ்ரர் தேவாரமெல்லாம் நல்ல இசையோட பாடுவார். செவிக்கினிமையாயிருக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாவரும் சரிநிகர் சமானமே

சி.நற்குணலிங்கம்,
நெல்லியடி.

இன்று மனித உரிமைகள் தினம். மதிப்பான சமூக வாழ்க்கையை அனுபவிப்பதற்கு ஒரு மனிதனுக்கு மனித உரிமைகள் கட்டாயமாக இருக்கவேண்டிய உரித்தாகும். மனிதன் கௌரவமாக வாழ்வதற்கும், பாதுகாப்பாக இருப்பதற்கும் மனித உரிமைகள் உறுதியளிக்கின்றன. மனித உரிமைகளை முழுமையாக அனுபவிக்கமுடியாத சமுதாயத்திலோ, நாட்டிலோ மனிதன் சிறப்புற வாழ்வதும், மகிழ்வாக வாழ்வதும், பூரண அபிவிருத்தியைப் பெற்றுக்கொள்வதும் கடினமானதாகவே இருக்கும். ஆரோக்கியமான அறிவுடன்கூடிய அமைதியான தேசம் உருவாக மனித உரிமைகள் பற்றிச் சிறுவர் முதல் முதியோர் வரை அறிந்திருத்தல் அவசியமானதாகும். அனைவருக்கும் கண்ணியம், சுதந்திரம் மற்றும் நீதி` எனும் தொனிப்பொருளில் இந்த ஆண்டுக்கான மனிதஉரிமைகள்தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் ஏற்றுக்கொள்ளப்பட்டு இந்த ஆண்டு 75 ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி இந்தத் தொனிப்பொருள் 2022 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

உணவு, உடை, உறையுள் என்னும் அடிப்படை வசதிகள் இன்றி மனிதன் வாழமுடியாததால் அவை விட்டுக்கொடுக்க இயலாத, மறுக்கமுடியாதவை அடிப்படை உரிமைகளாக கருதப்படுகின்றன. அடிப்படைத் தேவைகள், ஏனைய தேவைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டும், அந்தந்த நாட்டின் மூலச்சட்டங்களைக் கருத்திற்கொண்டும் மனித உரிமைச் சட்டங்கள் வடிவமைக்கப்படுகின்றன. இன, மத, பால் வேறுபாடுகளின்றி ஒவ்வொரு தனிமனிதனுக்கும் இருக்கும் இவ் அடிப்படை உரிமைகள் மனித சுதந்திரமாக, சுமுகமாக, நலமாக வாழ அவசியமான உரிமைகளாகக் கருதப்படுகின்றன.

1525 ஆம் ஆண்டில் விவசாயிகளின் கோரிக்கைகள் தொடர்பாக ஜேர்மனியில் வெளியிடப்பட்ட ``கறுப்புக் காட்டின் பன்னிரண்டு அம்சங்கள்`` என்னும் ஆவணமே ஐரோப்பாவின் முதல் மனித உரிமை தொடர்பான பதிவு எனலாம். 1776 இல் ஐக்கியஅமெரிக்காவிலும், 1789 இல் பிரான்ஸிலும் நிகழ்ந்த முக்கியமான புரட்சிகளின் விளைவாக வெளியிடப்பட்ட அறிக்கைகள் பல, அடிப்படை உரிமைகள் சட்டத்தில் இடம்பெற்றன. உலகப் போர்களும் அவற்றின் சேதங்களும், உரிமை மீறல்களும் தற்கால மனித உரிமைகள் தொடர்பான நடவடிக்கைகள் வளர்ச்சி பெறத் தூண்டுதலாக அமைந்தன. முதலாம் உலகப்போரின் பின்னர் 1919 இல் சர்வதேசச் சங்கம் எனும் அமைப்பு உருவாக்கப்பட்டது. இந்தச் சங்கத்தின் பட்டயத்தில் இச் சங்கத்தினால் முன்னெடுக்கப்படவேண்டிய பல உரிமைகள் குறித்த ஆணைகள் வழங்கப்பட்டிருந்தன. இவை இன்றைய மனித உரிமைகள் அறிக்கையிலும் உள்ளடக்கப்பட்டன. 1945இல் இரண்டாம் உலகப்போரின் விளைவாக உலகப் பாதுகாப்பு அரணாக ஐக்கியநாடுகள்சபை உருவாக்கப்பட்டது. மனித உரிமைகள் சட்டம் தொடர்பில் இந்தஅமைப்பு பெரும் பங்காற்றி உள்ளது. 1948 ஆம் ஆண்டு ஐக்கியநாடுகள் பொதுச்சபையில் 30 பிரிவுகளைக்கொண்ட உலக மனித உரிமைகள் சான்றுரை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

1948.12.10 இல் ஐக்கியநாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தில் உலகளாவிய பிரகடனத்துக்கு 48 நாடுகளின் ஆதரவான வாக்களிப்புடன் சர்வதேச மனித உரிமைகள் தினமாக டிசெம்பர் 10 ஆம் திகதி மனித உரிமைகள் தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது. ஒவ்வொரு தனிமனிதனும் தான் வாழ்வதற்கான உரிமையைப் பெறுவதும், மற்றமனிதரையும் வாழவிடும் நெறிமுறையை உணர்த்துவதே இந் நாளின் முக்கியமான நோக்கமாகும். எல்லா மனிதர்களும் சுதந்திரமானவர்களாகவும் உரிமையிலும், கண்ணியத்திலும் ஒருவருக்கொருவர் சமமானவர்கள் என்பதை வலியுறுத்துகிறது.

மனித உரிமைகள் குடியியல், அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு உரிமைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. வாழும் உரிமை, உணவுக்கான, நீருக்கான உரிமை, சுகாதார உரிமை, பேச்சு உரிமை, ஊடக உரிமை, சிந்தனை உரிமை, மத உரிமை, தகவல் உரிமை, கல்வி உரிமை, பண்பாட்டு உரிமை, மொழி உரிமை, கலாசார உரிமை, சொத்து உரிமைகள், அடிமையாகா உரிமை, சுயநிர்ணய உரிமை, ஆட்சியில் பங்குகொள்ளும் உரிமை, வாக்களிக்கும் உரிமை, நேர்மையான விசாரணைக்கான உரிமை என்று ஏராளமான உரிமைகள் இந்த உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த உறுப்புரைகளை மீற எந்த நபருக்கோ, நாட்டுக்கோ உரிமை கிடையாது.

மனித உரிமைகள் பிரகடனத்தின் சாராம்சம் "எல்லா மக்களும், குழுக்களும் சுயநிர்ணய உரிமை இருப்பதால் அவர்கள் தமது அரசியல் அந்தஸ்தினை சுயமாகத் தீர்மானிப்பதுடன் தமது சமூக, பொருளாதார, கலாசார அபிவிருத்தியையும் சுயமாக முன்னெடுக்கலாம் `என்பதாகும். இந்தப் பிரகடனத்தில் உள்ள விடயங்களை உறுப்பு நாடுகள் முழுமையாகப் பின்பற்றாத காரணத்தால் 1966 இல் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச ஒப்பந்தம் மற்றும் சமூக, பொருளாதார, கலாசார உரிமைகள் மீதான சர்வதேச ஒப்பந்தம் ஆகிய இரண்டும் ஐக்கியநாடுகள் சபையால் கொண்டுவரப்பட்டன.

நாடுகளுக்கு இடையிலான யுத்தம், உள்நாட்டு மோதல்கள் வர்த்தகப் போராட்டங்கள் நிகழும் சந்தர்ப்பங்களில் மனித உரிமைகள் பல நாடுகளில் மீறப்பட்டுள்ளன, மீறப்படுகின்றன. ஒவ்வொருவரும் தம் உரிமைகளை தாம் மதித்து நடப்பதுடன் பிறரது உரிமைகளையும் மதித்து நடக்கவேண்டும். இதனை சட்டங்களினால் மாத்திரம் நடைமுறைப்படுத்த முடியாது. அனைவரது மனப்பாங்கிலும் மாற்றம் ஏற்படவேண்டும். மனித சமுதாயம் எவ்வளவுதூரம் நாகரிகத்தில் முன்னேறியபோதும் அதே அளவுக்கு உரிமைகள் மீறப்படுவதை நாம் அறிவோம். எழுத்துருவில் உரிமைகள் இருப்பது முக்கியமல்ல. நடைமுறையில் எப்படி இருக்கிறது என்பதுதான் முக்கியம்.



# வில்லியம் பிளேக்கும் நச்சுமரமும்

கோகுலராகவன்

வில்லியம் பிளேக் (William Blake) ஒரு பிரித்தானிய கவிஞர் , ஓவியர் எனப் பன்முகப் படைப்பாளுமை கொண்டவர். 18 ஆம் நூற்றாண்டின் தலை சிறந்த ஆங்கில படைப்பிலக்கியவாதியாகவும் கருதப்படுகிறார்.
எங்களுடைய மகாகவி சுப்பிரமணிய பாரதியார் போல இவரும் வாழும் காலத்தில் கொண்டாடப்படாத கவிஞர்தான்.
மறைந்த பிறகே கொண்டாடப்பட்டார் என்பது வியப்பல்ல.
18 ஆம் நூற்றாண்டின் சிறந்த புனைவியலாளராக (Rom antic) பிளேக் கொள்ளப்படுகிறார். அவரது கவிதைகள் புனைவிலக்கிய முறையில் எழுதப்பட்டவை . இந்தப் புனைவிலக்கிய முறைமையின் முன்னோடியாகவும் அவர் கொள்ளப்படுகின்றார். மரபு சார்ந்த புராண (Epic) அமைப்பிலிருந்து கவிதை மொழியை நவீன வடிவத்துக்கு கொண்டு வந்த கவிதை அமைப்பு முறை பிளேக் மூலம் உருவாதென விமர்சகர்கள் கூறுகின்றனர். மனித சமத்துவத்தை வலியுறுத்திய கவிஞராகவும் பிளேக் இருந்தார். மனிதர்கள் நிறத்தால் ஒதுக்கப்படுவதை பிளேக் எதிர்த்தமை முக்கியமான அம்சமாகும். தன் கவிதைகளில் தீர்க்கதரிசனமான கருத்துகளை முன்வைத்தார். இது மனித அடிமைத்தனத்தை ஒழிப்பதற்கு அடித்தளமிட்ட முதற் கவிஞராக பிளேக்கை இனம் காண வைத்தது. அவரது 'poison tree' நச்சு மரம் என்ற கவிதை இயல்பான நடையில் எழுதப்பட்ட கவிதை.




## ஒரு நச்சு மரம்

நான் நண்பனிடம் கோபம் கொண்டேன்.
என் சினத்தை அவனிடம் கொட்டினேன்
என் சினம் தணிந்தது.
நான் பகைவனிடம் கோபம் கொண்டேன்.
தணிக்கவேயில்லை.
வஞ்சம் வளர்ந்தது.
அவன் மீதான அச்சம் தண்ணீராகியது.
நாளொரு மேனி கண்ணீரால் வளர்த்தேன்.
என் புன்னகை சூரிய ஒளியானது
மேலும் பல கபட தந்திரங்கள்
நிகழ்ந்தன.
பகை ஒரு அப்பிள் மரமாக வளர்ந்தது.
மரத்தின் கீழ் என் எதிரியைக் கண்டேன்.
இது என் மரமென அவன் அறிவான்.
அவன் அதில் பழத்தைத் திருட வந்தான்.
இரவு முடிந்து மலர்ந்த அதிகாலையில்
என் எதிரி அந்த மரத்தின் கீழ் இறந்து
கிடந்ததைக் கண்டேன்.



Written by:William Blake
தமிழில்: R.கோகுலராகவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசுக்...




(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் பலப்படுத்திக் கொண்டவர். யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்ட ஓர் ஊடக முதலாளி ஒருமுறை சொன்னார் "தமிழ் மக்களின் வாக்குகளால் அவர் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக வருகிறார். அதேசமயம் தென்னிலங்கையில் அவர் அரசியல் உயர் குழாம், படைத்துறை உயர் குழாம், புத்திஜீவிகள், ஊடகங்கள் மத்தியில் செல்வாக்கு மிக்கவராக வளர்ந்திருக்கிறார். தென்னிலங்கை அரசியலில் அதிகம் செல்வாக்கு மிக்க ஒரு தமிழ் அரசியல்வாதி அவர்தான். தமிழ் மக்களின் வாக்குகளால் அவர் கொழும்பில் ஒரு பிரமுகராக வலம் வருகிறார்" என்று.

தனது மொழிப்புலமை, வாழ்க்கைப் பின்னணி காரணமாக சுமந்திரன் தென்னிலங்கையில் மட்டுமல்ல, உலக அளவில் ராஜதந்திரிகள் மத்தியிலும் ராஜதந்திர வட்டாரங்களிலும் அதிகம் தெரியவந்த ஒருவராகக் காணப்படுகிறார். இப்பொழுது சிறீதரனைப் பார்க்கலாம். அவருடைய வேர் தீவுகளில் இருக்கிறது. அவர் தன்னைப் பலப்படுத்திக்கொண்டது கிளிநொச்சியில். போராட்டப் பாரம்பரியத்தில் வந்தவர். அதிகம் உள்ளூர்ப் பண்புடையவர். உள்ளூர் உணர்வுகளை அதிகம் பிரதிபலிப்பவர். தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட பின்னரான ஒரு கால கட்டத்தில் போரினால் அதிகம் பாதிக்கப்பட்ட ஒரு மாவட்டத்தை பிரதிநிதித்து வப்படுத்தியவர் என்ற அடிப்படையில் அவருடைய பாரம்பரியம் அவருடைய வாழ்க்கைமுறை போன்றன சுமந்திரனிடமிருந்து வேறுபாடானவை.

இந்த வேறுபாடுகளை சிறீதரனை ஆதரிப்பவர்கள் கொள்கை வேறுபாடுகளாக வியாக்கியானம் செய்கிறார்கள். சுமந்திரனின் அணுகுமுறை அதிகம் மிதவாதத் தன்மைமிக்கது, இணங்கிச் செல்லும் தன்மை மிக்கது. அதனை அவருடைய கொழும்புமைய நிலையான நலன்கள் பெருமளவுக்குத் தீர்மானிக்கின்றன. ஆனால் சிறிதரனின் அணுகுமுறை அதிகம் எதிர்ப்புத் தன்மை மிக்கது. ஒப்பீட்டளவில் சுமந்திரனை விடத் தீவிரமானது.

ஆயினும் ஒரு தேர்தல் நடக்குமாக இருந்தால், அதாவது தேர்தலை தவிர்ப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றி பெறவில்லை என்றால், தேர்தலில் இருவருக்கும் இடையிலான முரண்பாடு கொள்கை முரண்பாடாகவே காட்டப்படும். சிலசமயம் அது பிரதேசவாதமாகவோ அல்லது மதவாதமாகவோ மாறக்கூடிய ஆபத்துகளும் உண்டு.

அதை ஒரு கொள்கை வேறுபாடாக காட்டுவது சிறீதரனுக்கு ஒப்பீட்டளவில் பாதுகாப்பாக இருக்கும். அனுகூலமாகவும் இருக்கும். தமிழ்த் தேசிய நிலைப்பாட்டுக்கும் கொழும்பு மைய தமிழ் நிலைப்பாட்டுக்கும் இடையிலான ஒரு மோதலாக அதை உருவகித்தால் தனக்கு அதிகரித்த ஆதரவு கிடைக்கலாம் என்று அவர் நம்பக்கூடும். அதாவது கொள்கை அடிப்படையில் தன் பக்கம் பலமாக உள்ளது என்று அவர் நம்பக்கூடும். ஆனால், கடந்த 14 ஆண்டுகளிலும் அப்படியெல்லாம் கொள்கை வழியில் கட்சிகள் கட்டியெழுப்பப்பட்டனவா? தமிழ்மக்கள் கொள்கைகளுக்கு வாக்களிக்கிறார்கள் என்பது ஒரு "டெம்ப்லட்" வகை வசனமாக மாறி வருகிறதா? ஏனெனில் தமிழ் அரசியல்வாதிகள் தமது விசுவாசிகள் கூட்டத்தை கொள்கை அடிப்படையில் கட்டியெழுப்பியதை விட அதிகமாக எதிர்கால நலன்களின் அடிப்படையில்தான் கட்டியெழுப்பி வைத்திருக்கிறார்கள்.

எந்த நாடாளுமன்ற உறுப்பினரோடு நின்றால் தனக்கு உள்ளூராட்சிச்சபையில் ஆசனம் கிடைக்கும்; அல்லது மாகாணசபையில் ஆசனம் கிடைக்கும்; அல்லது நாடாளுமன்றத்தில் ஆசனம் கிடைக்கும் என்று கணக்குப் பார்த்தே பெரும்பாலான தொண்டர்கள் தலைவர்களைச் சூழ்ந்து காணப்படுகிறார்கள். அதாவது தேர்தல்மைய நோக்கு நிலையில் இருந்து சிந்தித்தே பெரும்பாலான கட்சி வலைப்பின்னல்கள் கட்டியெழுப்பப்பட்டுள்ளன. யாரோடு நின்றால் கட்சிக்குள் தங்களுடைய அடுத்தடுத்த கட்டப் பதவி உயர்வுகளைப் பாதுகாக்கலாம் என்றுதான் பெரும்பாலான கட்சித் தொண்டர்கள் சிந்திக்கிறார்கள்.

கொள்கைகளால் உருகிப் பிணைந்த ஒரு கட்டமைப்பாக கட்சி இருந்திருந்தால் கட்சிக்குள் உடைவு வரும்பொழுது அதை நாகரிகமாக கடந்து போக தெரிந்திருக்கும். சமூக வலைத்தளங்களில் நிகழும் மோதல்களில் தேசத் திரட்சியைப் பாதுகாக்கும் குறைந்தபட்ச அரசியல் நாகரீகமாவது பேணப்பட்டு இருந்திருக்கும். ஆனால் அதைக் காணவில்லை. இது தமிழரசு கட்சிக்குள் மட்டும் நடக்கவில்லை. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக்குள்ளும் நடந்தது. மணிவண்ணன் பிரிந்தபோது அதைக் காணமுடிந்தது. நேற்றைய தோழன் இன்றைய துரோகி. இவ்வாறு முன்னாள் தோழர்களை இந்நாள் துரோகிகளாக்கும் அரசியல் பண்பாடு புதியது அல்ல. இது தமிழ் ஆயுத அரசியலில் இருந்து மிதவாத அரசியல் வரை உண்டு.

ஏற்கனவே பல தசாப்தங்களுக்கு முன்பு தமிழரசுக் கட்சிக்கும் தமிழ் கொங்ரஸுக்கும் இடையே மோதல்களின்போது, இரு கட்சி ஆதரவாளர்களும் மலமுட்டிகளை பயன்படுத்துவார்கள். அதாவது மண் முட்டிகளுக்குள் மலத்தை நிரப்பிக் கொண்டு வந்து எதிராளியின் வீட்டு முற்றத்தில் உடைத்து விட்டுப் போவார்கள். அதே மலமுட்டிப் பாரம்பரியம் இப்பொழுது சமூக வலைத்தளங்களுக்கும் வந்துவிட்டது. முன்பு கட்சிகளுக்கு இடையே அது இருந்தது. இப்பொழுது கட்சிகளுக்குள்ளேயே வந்துவிட்டது. அது தேசத் திரட்சியைப் பாதுகாக்கும் ஓர் அரசியல் பண்பாடு அல்ல. கொள்கைப் பற்றுறுதி இருந்தால் அப்படியெல்லாம் பொது வெளியில் விமர்சனங்கள் வராது. தமிழ்க் கட்சிகளின் விசுவாசக் கட்டமைப்புக்கள் பெருமளவுக்கு கொள்கையை விடவும் எதிர்காலப் பதவி உயர்வுகளை மையமாகக் கொண்டு வளர்த்தெடுக்கப்பட்டவை தான்.

இப்படிப்பட்டதோர் அரசியற் சூழலில் தமிழரசுக் கட்சிக்குள், தலைவருக்கான ஒரு தேர்தல் நடந்தால், அது தமிழரசியலின் ஜனநாயகச் செழிப்பை நிரூபிக்குமா? அல்லது தேசத்திரட்சியை உடைக்குமா? தேர்தலில் யார் வென்றாலும் குறிப்பாகக் கிளிநொச்சியில் தமிழரசுக்கட்சிக்குள் உடைவு ஏற்படுமா?

# குட்டிமணி, ஜெகன், ஞானவேல்

## வழக்கு 1982 1983)



○ கே.வி.தவராசா

(சென்றவாரத் தொடர்ச்சி)

**நவரட்ணத்தின் தீர்க்கதரிசனம்**

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட முதலாவது வழக்கில், எனது குருநாதர் சட்டத்தரணி நவரட்ணம் (கரிகாலன்) செயற்பட்டமை கூடுதல் பெருமையாகும். சட்டத்தரணி நவரட்ணம் எப்போதும் எதையும் ஆழமாகப் பார்க்கும் பண்புகொண்டவர். மிகவும் அமைதியான சுபாவங்கொண்ட மிடுக்கான செயற்பாட்டாளர். இவ்வழக்கின் விசாரணை நடந்து கொண்டிருக்கையில் 'தமிழ் நாட்டிலுள்ள பாண்டி பஜாரில் பிரபாகரனும் உமா மகேஸ்வரனும் துப்பாக்கியால் ஒருவரையொருவர் சுட்டுக் கொல்ல முயற்சித்ததைத் தொடர்ந்து பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்' என்ற செய்தி சட்டத்தரணி நவரட்ணத்துக்குக் கிடைத்தது அவ்வேளையில் சட்டத்தரணி நவரட்ணம் (கரிகாலன்) "போராட்டம் நடத்தும் பொடியங்கள்; தாங்கள் ஒரு நாளும் ஒற்றுமையாக மாட்டார்கள். ஆனால் இராணுவத்துடன் சேர்ந்தாலும் அதற்கு ஆச்சரியப்பட ஒன்று மில்லை" என்றார். அவரது கணிப்பு பிற்காலங்களில் நிஜமானது . சில இயக்கங்கள் இராணுவத்துடன் இணைந்து செயற்பட்டமை தெரிந்ததே. அந்தக் காலகட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களாயிருந்த சட்டத்தரணிகளான ஆலாலசுந்தரம், தங்கத்துரை ஆகியோர் தமிழ் அரசியல் கைதிகளுக்கு எதிரான வழக்குகள் கொழும்பு நீதிமன்றங்களில் நடைபெறும் வேளையில் நீதிமன்றம் வந்து தம்மாலான ஒத்தாசையை வழங்குவதுண்டு.




குட்டிமணி மரண தண்டனைத் தீர்ப்பின் கீழ் இருந்தபோது அவரது எம்.பி. நியமனம் குறித்து வர்த்தமானியிலும் வெளியிடப்பட்டது. வெற்றிடமாக விருந்த நாடாளுமன்ற இருக்கைக்குக் குட்டிமணியை நியமித்தமைக்கான காரணத்தை விளக்குவதற்காக வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி முக்கியஸ்தர்கள் ஐந்து காரணங்களை உள்ளடக்கினர். அவற்றுள் இரண்டு மிக முக்கியமானவையாகும்:

(1) குட்டிமணியின் பெயர் நியமனமானது, பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் அடங்கிய நிறுவனங்கள் மூலம் குறிப்பாக நாட்டின் தமிழ் இளைஞர்கள்மீது காலத்துக்குக் காலம் இழைக்கப்படும் அரசபயங்கரவாதத்துக்கு எதிரான ஓர் அடையாள எதிர்ப்பாகும்.

(2) அது குட்டிமணி மற்றும் ஜெகன் ஆகியோர்மீது விதிக்கப்பட்ட மரணதண்டனைக்கு எதிரான ஓர் எதிர்ப்பாகும்

இந்தளவுக்கு அறிக்கை வெளியிடுமளவுக்கு தமிழர் அரசியல் சிந்தனையில் புதிய கண்ணோட்டத்தைப் பாய்ச்சி உயிர்ப்பூட்டிய சட்டத்தரணி நவரட்ணம் தமிழ் மக்களின் மரியாதைக்கும் மதிப்புக்கும் என்றும் உரியவரே. இப்போது தம்மை நிலைநிறுத்திக் கொள்வதற்காகவும் பதவிக்காகவும் எதையும் செய்யத் தயாராக இருக்கும் அரசியல்வாதிகளின் பண்பற்ற செயற்பாடுகளோடு ஒப்பிடுகையில் சட்டத்தரணி நவரட்ணம் மிக உயரந்த மனிதர். அவர் மீளவும் குட்டிமணியின் இடத்துக்கு நியமிக்கப்படாமை வருத்தத்துக்குரியதே.

**போராளிகளைப் போற்றிய சட்டத்தரணி சத்தியேந்திரா**

நீர்வேலி வங்கிக் கொள்ளை வழக்கில் ஆஜராகிய சிரேஸ்ட சட்டத்தரணி நடேசன் சத்தியேந்திரா தனது வழக்குத் தொகுப்புரையில் குறிப்பிடுகையில்,

"இந்த வழக்கு ஒரு சாதாரண வழக்கல்ல. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வழக்கு. இவ்வழக்கின் எதிரிகள் தமது இனமக்களின் விடுதலைக்காக வாழ்வை அர்ப்பணித்தவர்கள் என்று நான் இங்கு கூறியுள்ளேன். விடுதலை வேட்கையும் சுதந்திர தாகமும் என்றுமே வளர்ந்து வரக்கூடியவை. இக்கொள்கைகளை கொண்டவர்கள் இவர்கள். அடக்குமுறைகளினால் இவர்களை ஒழித்துக் கட்டிவிடமுடியாது. எமது இனத்தை சேர்ந்த இவர்கள் முன்னிலையில் என்னை நான் மிகவும் சிறியவனாக மதித்து தலை வணங்குகின்றேன்" நீர்வேலி வழக்கு தொகுப்புரையில் சிரேஸ்ட சட்டத்தரணி நடேசன் சத்தியேந்திரா கூறிய இந்த விடயங்கள் 19 பெப்ரவரி 1983 ஆம் திகதிய ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகின.

(அடுத்த வழக்கு அடுத்த வாரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org